# வருடாந்த அறிக்கை

# 2015

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

## மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கூட்டுத்தாபனத் தகவல்கள் | 4 |
| எமது பதவியணி பற்றிய விபரம் | 5 |
| தலைவரின் கூற்று | 6 |
| பணிப்பாளர் நாயகத்தின் கூற்று | 8 |
| எமது தூரநோக்கும் செயற்பணியும் | 10 |
| செயலாற்றுகை | 11 |
| நிதிக் கூற்று | 46 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 71 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 81 |

# கூட்டுத்தாபனத் தகவல்கள்

## அதிகார சபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

## சட்ட அந்தஸ்து

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டது.

## 2015 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

| திரு கீர்த்தி விக்ரமரட்ன | தலைவர் | இலங்கை நிலெபறுதகு வலு அதிகார சபை |
|---|---|---|
| திரு சி. ஜயசூரிய | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| திருமதி ஐ.ஜே. அபேரட்ன | உறுப்பினர் | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு |
| திருமதி எச்.எம்.எஸ். ஜயதுங்க | உறுப்பினர் | காணி அமைச்சு |
| திரு டீ.வி. பந்துலசேன | உறுப்பினர் | கமத்தொழில் அமைச்சு |
| திரு டப்ளியூ.ரீ.எச். ருச்சிர விதான | உறுப்பினர் | மகாவலி அமைச்சு |
| பொறியியலாளர் டீ.டீ. ஆரியரட்ன | உறுப்பினர் | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு |
| திரு ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க | உறுப்பினர் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு |
| திருமதி ஆர்.பி.பி. அமரசிங்க | உறுப்பினர் | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு |
| திரு தமித்த குமாரசிங்க | உறுப்பினர் | இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு |
| திருமதி பர்ஷான் அனிப் | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| திரு ஏ.எம்.சி. பெரேரா | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| திரு ஜீ. மகேந்திர பெரேரா | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| திருமதி கே.என். குமாரி சோமரட்ன | உறுப்பினர் | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| திரு எஸ் தர்ஷன் | உறுப்பினர் | நிதி அமைச்சு |
| திரு ஹிரான் அஜித் குமாரரட்ன | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |

## 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் பற்றிய விபரம்

| திரு எஸ். தர்ஷன் | தலைவர் | நிதி அமைச்சு |
|---|---|---|
| திரு டீ.டீ. ஆனந்த நாமல் | உறுப்பினர் | இலங்கை சக்தி முகாமையாளர்கள் சங்கம் |
| திரு ஏ.ஜி.எம். மலிக்க விமலசூரிய | உறுப்பினர் | வானிலை அவதான நிலையம் |
| திரு எஸ்.எம்.ஜே. பியரட்ன | அவதானிப்பாளர் | கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் |
| திரு எஸ்.கே. மலவிசூரிய | அவதானிப்பாளர் | மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு |

## 2015 ஆம் ஆண்டிற்கான பதவியணி பற்றிய விபரம்

ஒப்பீட்டளவில் எமது அதிகார சபை புதியவொரு இளம் நிறுவனமாகும். இங்கு மொத்தமாக 104 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

பதவியணி பற்றிய விபரங்கள் கீழ்காணும் வரைபடத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.




## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

கட்டிடத்தொகுதி 05, 01-வது மாடி, BMICH,

பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.

தொலைபேசி: 0112677445

தொலைநகல்: 0112682534

மின்னஞ்சல்: info@energy.gov.lk

இணையத்தள முகவரி: www.energy.gov.lk

**தலைவரின் செய்தி**



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் என்ற ரீதியில் 2015 ஆம் ஆண்டின் செயற்பாடுகளினது செயலாற்றுகை மீளாய்வுக்கு இந்தச் செய்தியை விடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சக்தி என்பது நாட்டின் அபிவிருத்திற்குத் தேவையான அடிப்படை நுகர்வுப் பொருட்களில் ஒன்றாகும். ஆகையால், சக்தித் துறையில் ஆகக்கூடிய சாத்தியமான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விதத்தில் சக்தி விநியோகமும் அதற்கான கேள்வியும் அனுகூலமான அளவில் கையாளப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வது முக்கியமானதாகும். இதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, சக்தியின் நிலைபெறுதகுதன்மையானது நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமான ஒரு பொருளாதாரப் பரிமாணமாக இனங்காணப்படுகின்றது.

சக்திப் பாவனையின் முழு வரலாற்றிலும் நிலைபெறுதகு சக்திற்கு இலங்கை உரிய கவனம் செலுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். சக்தியைப் பாதுகாப்பது என்ற விடயம் நிலைபெறுதகு சக்தியின் முக்கியமான அடிப்படை அங்கங்களில் ஒரு அங்கமாகும். சக்தியைப் பாதுகாக்கும் இந்தப் பொறுப்பு தற்பொழுது எமக்கும் மற்றும் எமது மக்களுக்கும் சாட்டப்பட்டுள்ளது. சக்தி வளங்கள் சுற்றாடலில் வெளியிடப்படுவதற்கு முன்னர் ஆகக்கூடிய சாத்தியமான நன்மைகளை அடையும் பொருட்டு நாம் வழமையாக அத்தகைய சக்தி வளங்களைப் பயன்படுத்தி வந்திருந்தோம். அது எங்களின் வாழ்க்கை வட்டத்தின் பாகமாக விளங்கியது. பின்னர், அது சக்தி வளங்களுக்கு வருகின்ற போது, ஒரு சில காலங்களுக்கு முன்னர் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியினூடாக எமது மொத்த சக்தித் தேவையை எம்மால் பூர்த்தி செய்ய முடிந்தது. எவ்வாறாயினும், குறிப்பாக நீர் வளங்கள் பாரிய அளவில் அரிதாகி வந்ததால் இலங்கை ஏனைய சக்தி வளங்களின் பால் நகர வேண்டியிருந்தது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினூடாக எமது நாடு நவீன சக்திப் பாவனையில் ஒரு நிலைபெறுதகு சக்தி மார்க்கத்திற்கு நகர்வதற்கான வலிமைமிகு முன்னெடுப்பு திட்டங்களை ஆரம்பித்துள்ளது என்பதை நான் புரிந்துகொள்கின்றேன். நாம் பாரம்பரிய பாதுகாப்புப் பரிகார நடவடிக்கைகளை வழமையாகப் பிரயோகித்தாலும், பாரம்பரிய அணுகுமுறைகளினூடாக தற்போதைய சூழ்நிலையில் அவசியமான சக்திப் பாதுகாப்புத் தேவையை எம்மால் நிறைவேற்ற முடியாது. சக்திப் பாவனையை சரியான முறையில் கையாளுவதனூடாக அத்தகைய சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தும் பொருட்டு எமக்கு நவீன தொழில்நுட்பம், சட்டவாக்க அணுமுறைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அறிவு,

விழிப்புணர்வு என்பன அவசியமாகும். அதே போன்று, சக்திப் பாவனையைப் பொறுத்த வரையில், நாட்டின் சக்திக்கான எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுதேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அனுகூலமான முறையில் பயன் படுத்தும் பொருட்டு நாம் நவீன புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றவும் வேண்டும்.

நாட்டின் நிலைபெறுதகு சக்தி தொடர்பான பரந்த அமுலாக்கத்திற்காக விதிக்கப்பட்டுள்ள தேவையான வேலைச்சட்டகக் கண்ணோட்டத்தில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். இது எதிர்காலத்தில் நிலைபெறுதகு சக்தியின் வளர்ச்சியடைந்துள்ள ஒரு கட்டத்திற்குரிய உகந்த ஒரு அடித்தளமாகவும் விளங்கலாம். கூறப்பட்ட பின்னணியில் பார்க்கும் போது, நன்கு ஒருமுகப்பட்ட வலிமையான ஒரு விதத்தில் நாட்டில் நிலைபெறுதகு சக்தி எண்ணக்கருவை அமுலாக்குவதில் முற்றும் முக்கியத்துவம் பெறுவது யாதெனில் புரிந்துணர்வுடன் செயற்பாடுகளை வலுப்படுத்துவதாகும்.

நாட்டில் நிலைபெறுதகு சக்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் ஒத்துழைப்பை நல்கியமைக்கு மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சருக்கும், ஏனைய அக்கறையுடைய சகல தரப்புகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இத்தருனத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கீர்த்தி விக்ரமரட்ன

தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையானது (இ.நி.வ.அ.ச.) சக்தி நிலைபெறுதகு தன்மையை நோக்கி நாட்டிற்கு வழிசமைத்து அதனை அதன் பால் நகரச்செய்யும் முக்கிய தேசிய நிறுவனமாக விளங்குகின்றது. இ.நி.வ.அ.ச. 2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அதன் தாபிப்பானது நாட்டின் சக்திப் பயணத்தில் முக்கியமான ஒரு திருப்புமுனையாக அமைந்தது. உலகலாவிய கவனம் சக்தியின் நியாயமான பாவனையில் படிப்படியாக ஒருமுகப்பட்டு வருவதைப் புரிந்துகொள்வதன் மூலம், நிலைபெறுதகு சக்தியிலுள்ள முன்னெடுப்புத்திட்டங்களுக்கு இணங்க முழு நாட்டினதும் முன்னேற்றத்தை பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சி அடைய முடியும். இது வரை அமுல்படுத்தப்பட்டுள்ள முன்னெடுப்புத் திட்டங்கள் எதிர்காலத்தில், குறித்த விடயத்தில் இலங்கை முதன்மை வகிக்கும் ஒரு நாடாத மாறக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி மற்றும் சக்தி முகாமைத்துவம் ஆகிய இரண்டு பெரும் கருப்பொருள் பிரிவுகளின் கீழும் அதே நேரம் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் அடைந்த சாதனைகளிலும், அறிவிலும், மற்றும் திறமுறைத்திட்டப் பிரிவுகளிலும் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு, 2015 ஆம் ஆண்டு இ.நி.வ.அ.ச. சபையில் சிறந்த ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அடிப்படையிலான சக்தி உற்பத்திக் கொள்ளளவு 450 மெ.வொ. என்ற அளவை விஞ்சி வருவதால், புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பயன்படுத்தி 10% வீத

மின்சாரத்தை உற்பத்தி செய்தல் என்ற அடிப்படை இலக்கை நாடு விஞ்சிவிடலாம். அதே போன்று, ஒழுங்குறுத்துகை மற்றும் வசதி சார்ந்த தலையீடுகள் போன்ற வழிகளில் செயற்படுத்தப்பட்ட சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களினூடாகவும் அதே நேரம் கைத்தொழில், வர்த்தக, மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் வீட்டுத் துறை என்பவற்றிலும் செயற்படுத்தப்பட்ட அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாவும் மின்சாரம், எரிபொருள் எண்ணெய் மற்றும் விறகுகள் என்பவற்றின் நுகர்வை அதிகளவில் குறைக்கும் குறிக்கோளை அடைய முடிந்தது. இவை தவிர, குறிப்பாக கொள்கை, திறமுறைத்திட்டம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களில் எதிர்கால ஒருமுகப்பாட்டுடன் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்காலத்தில் குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படைகளில் நோக்கெல்லையும் மற்றும் கருப்பொருளும் அடங்கிய பிரிவுகளை மேம்படுத்தும் பொருட்டு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.

நாட்டில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதில் ஒன்றிணைந்து செயற்பட்ட சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடு சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கிய ஒரு பயணத்தில் நீண்டகாலம் பயணிக்க வேண்டியிருப்பதால், அனைத்து அக்கறையுடைய தரப்புகளிடமிருந்தும் கிடைக்கும் உதவி ஒத்தாசை எமது எதிர்கால வெற்றியின் அடிப்படைத் தேவைப்பாடாக விளங்கும். சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கி நாட்டை நகரச்செய்வதற்கான எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களில் உதவி ஒத்தாசைகளை நல்குமாறு அனைத்துத் தரப்புகளிடமும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**எம்.எம்.ஆர். பத்மசிறி**

**பணிப்பாளர் நாயகம்**

## எமது தூரநோக்கு

மின்சக்தி பாதுகாப்புடைய ஓர் இலங்கை என்பது எமது தூரநோக்காகும்.

## எமது செயற்பணி

அகழ்வு, ஆராய்ச்சி, வசதிகள் விநியோகம், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி மற்றும் அதே போன்று அறிவு முகாமைத்துவம் என்பவற்றினூடாக உள்நாட்டு சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை சேமிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் தேசிய முயற்சிக்கு வழிகாட்டுவதும், அதனூடாக இயற்கைவளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றைப் பாதுகாத்து இலங்கையின் மின்சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு வழிசமைத்தல் எமது செயற்பணியாகும்.

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**

இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் திறமுறைத்திட்டங்களும் தேசிய மற்றும் தனியாள் உள்ளுணர்வுகளிலிருந்து சக்தியின் பாதுகாப்பு மீது ஒரு கடுமையான அழுத்தத்தைக் கொண்டுள்ளன. எல்லா நேரங்களிலும் சகல பிரஜைகளுக்கும் சுமக்கக்கூடிய செலவில் நம்பத்தகுந்த, தூய்மையான சக்தி கிடைக்கப்பெறும் ஒரு நிலை உருவாகும் என இந்தக் கொள்கை ஆவணம் எதிர்வுகூறுகின்றது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) நாட்டில் சகல வகையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் நிலைபெறுதகு பாவனையையும் மற்றும் அதிகரித்த பின்பற்றும் நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கின்ற முக்கியமான அரச நிறுவனமாகும். தற்பொழுது இலங்கையின் சக்தித் துறை குறிப்பாக சுமக்கக்கூடிய விலைகளில் முழு நாட்டிற்கும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குதல் மற்றும் அனல் சக்தி உற்பத்திற்காக இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களில் கடுமையாக தங்கியிருக்கின்ற பொருளாதாரத்தில் கடும் பாதகமான தாக்கங்கள் என்பன தொடர்பில் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. இந்நிலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அரசாங்கம் பின்வரும் திறமுறைத்திட்டங்களை வகுத்தமைத்துள்ளது:

- இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்க்கு ஒரு பிரதியீட்டுப் பொருளாக 2020 ஆம் ஆண்டளவில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களைப் பயன்படுத்தி 20% வீத க்றிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
- சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி 2020 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி நுகர்வை 10% வீதத்தால் குறைத்தல்.

2015 ஆம் ஆண்டு இறுதியளவில் மொத்த மின்சார உற்பத்தியில் மேலதிகமாக 10% புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (பு.மீ.ச.) என்ற மட்டுப்பாட்டை விஞ்சிச்செல்ல முடிந்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டளவில் பு.மீ.ச. சக்தியைப் பயன்படுத்தி 20% வீத மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலக்கை உணர்த்தும் பயணத்தில் திருப்திகரமான திருப்புமுனையை சுட்டிக்காட்டுகின்றது.
சக்தி வினைத்திறன் சேவைகள் துறையை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துகை தலையீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனத்தை செலுத்தி, சக்திப் பாதுகாப்புப் பிரிவில், சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 100 ஜி.வொ.ம. மின்சாரத்தை சேமிக்க முடிந்தது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் 4 கருப்பொருள் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி - தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்பு இலக்குகளை உணரச்செய்வதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப்பொருள்: REACT - மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி செயற்பாடுகள்)
- சக்திப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் - தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்பு இலக்குகளை உணரச்செய்வதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும். (விஷேட கருப்பொருள்: EnMaP - சக்தி முகாமைத்துவத் திட்டம்)

- அறிவு முகாமைத்துவம் - சக்தி உள்ளுணர்வுடைய மக்கள் சமூகத்தை உருவாக்குவதை நோக்கிய சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது இதன் குறிக்கோளாகும். (விஷேட கருப்பொருள்: SEEK - சக்தி தொடர்பான அறிவினூடாக நிலைபெறுதகு சக்தி இலக்கை அடைதல்)

- திறமுறைத்திட்டம் - கொள்கை ரீதியான தலையீட்டு நடவடிக்கைகள், ஆ.அ. சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்து தொழில்நுட்பம் சார்ந்த பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுசெய்தல் மற்றும் நாட்டில் நீண்டகால நிலையான சக்தித் தாபிப்புக்கு ஆதரவளித்தல் என்பன இதன் குறிக்கோளாகும். (விஷேட கருப்பொருள்: SAFE - எதிர்கால சக்திற்கான நிலைபெறுதகு அணுகுமுறை)

2015 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் என்பன பற்றிய விபரங்கள் பின்வரும் பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## 2. செயலாற்றுகை - 2015

| | *மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி (REACT இன் கீழ்)* |
|---|---|
| 1 | **வள ஒதுக்கீடும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும்**<br><br>இ.நி.வ.அ.ச. வர்த்தக அளவிலான கருத்திட்டங்களில் மீ.ச. சுதேசிய சக்தி வளங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் பொருட்டு, ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களுக்கான தற்காலிக அங்கீகாரங்கள் (த.அ.), சக்தி அனுமதிப்பத்திரங்கள் (ச.அ.) என்பவற்றை வழங்கும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. 2015 ஆம் ஆண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| | • நீர்வலு கருத்திட்டம் - 302 மெ.வொ.<br>• காற்றுமூல சக்திக் கருத்திட்டம் - 128 மெ.வொ.<br>• உயிரணுத்திணிவுச் சக்திக் கருத்திட்டம் - 24.5 மெ.வொ.<br>• சூரிய சக்திக் கருத்திட்டம் - 1.36 மெ.வொ.<br><br>2015 ஆம் ஆண்டில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தின் அளவு 1,215 ஜி.வொ.ம. (2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும்) ஆகும்.<br>சூரிய சக்தி மூலம் 1,760,457 கி.வொ.ம. மின்சாரமும், நீர்வலு மூலம் 192,615 கி.வொ.ம. மின்சாரமும் இ.நி.வ.அ.ச. இயக்கும் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டன. |
| 2 | **முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு**<br>சக்தி உற்பத்தித் தரப்புகள் அவற்றின் கருத்திட்டங்களை தாமதமின்றி முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு அத்தகைய தரப்புகளுக்கு உதவுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும்.<br><br>✓ த.அ. மற்றும் ச.அ. ஆகியன வழங்கப்பட்ட சகல கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் கண்காணித்து அத்தகைய தரப்புகள் அத்தகைய கருத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதில் அத்தகைய தரப்புகளுக்கு உதவுதல்.<br><br>அது தவிர, க்றிட் மின்சார முறைமையுடன் இணைக்கப்பட்ட சக்திக் கருத்திட்டங்களின் செயலாற்றுகைகள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பரிசீலிக்கப்படுகின்றன.<br><br>✓ இனங்காணப்பட்ட பதினைந்து கருத்திட்டங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. அனுகூலமான முறையில் சக்தியைப் பயன்படுத்தும் பொருட்டு அந்தக் குறித்த மின்பொறித் தொகுதிகள் தொடர்பில் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. |

| 3 | **தொழில்நுட்ப அபிவிருத்தியும் ஆராய்ச்சியும்** |
|---|---|

இ.நி.வ.அ.ச. இலங்கையில் காணப்படும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை வரைபடப்படுத்துவதில் ஒருமுகப்படுகின்ற தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. மீளப்புதுப்பிக்கத்தகு சக்திற்கான (அனல் மற்றும் மின் சக்தி) வழிகாட்டல் அபிவிருத்தி தொடர்பில் உள்ளீடுகளை வழங்கும் நோக்கத்தில், சூரிய சக்தி, சிறிய நீர்வலு, உயிரணுத்திணிவுச் சக்தி, விவசாயக் கழிவுகள், மாநகரக் கழிவுகள் என்பன தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அனல் சக்திக் களஞ்சிய முறைமைகள் போல் சக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பில் வளத் தொழில்நுட்ப மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் நிறைவு செய்யப்பட்ட சில செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ✓ மின்சாரம் மற்றும் அனல் சக்தி வளங்கள் என்பவற்றுக்கான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள அபிவிருத்தித் திட்டத்தைத் தொகுத்து வகுத்தமைக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ✓ புத்தளம் மற்றும் கற்பிட்டிய ஆகிய பிரதேசங்களுக்கான காற்று சக்தி வளங்கள் வரைபடம் தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. வட மாகாணத்தின் விரிவான சக்தி வளங்கள் வரைபடம் தயாரிக்கும் பணி 'குவான்டெம் லீப்' கருத்திட்டம் என்ற ஆ.அ.வ. நிதியளித்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- ✓ முல்லிபுரம் மற்றும் சிலாவத்துறை ஆகிய காற்றுக் கோபுரங்களின் முக்கிய பராமரிப்புப் பணிகளும் மற்றும் புதிய உபகரணங்கள் நிறுவுகையும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
|  **பூனாகரி காற்று அளவீட்டு நிலைய கோபுர நிறுவுகை** |  **முக்கியமான பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் முல்லிபுரம் காற்றுக் கோபுரத்தின் நிலை** |



**பூனாகரி காற்று அளவீட்டு நிலைய கோபுர நிறுவுகை**



**கோகிலாய் காற்று அளவீட்டு நிலைய கோபுர நிறுவுகை**

✓ மேல் மாகாணத்திலுள்ள அனல் இரசாயன வழியலகுகளின் அடிப்படையிலான மாநகர திண்மக் கழிவு சேர்வுகள் பகுப்பாய்வினது முடிவுகள் பின்வருமாறு காணப்படும்:

- 2004 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இயற்கை சேர்வுகள் 65% வீதத்திலிருந்து 52% வரை குறைந்தமை.
- ப்ளாஸ்டிக் + பொலித்தீன் பாவனை 5.4% வீதத்திலிருந்து 12% வீதம் வரை அதிகரித்தமை.
- காகித மற்றும் கடின அட்டை பாவனை 7% வீதத்திலிருந்து 11.35% வீதம் வரை அதிகரித்தமை.
- எரிபாகம் அண்ணளவாக 37% (முன்னர் அண்ணளவாக 25) வீதம்.

எரிபாக வீதங்கள் 37% வீதம் வரை அதிகரித்துள்ளதாக முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆகையால், அது நேரடியாக எரிபாகத்திற்கு சாதகமாக அமையாது. சக்தி மீட்புத் தெரிவுகளுக்கான முன்கூட்டிய ஒரு சுத்திகரிப்பு முறை அவசியமாகும்.

✓ விவசாயக் கழிவுகள், மரக் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள் மற்றும் மாநகர திண்மக் கழிவுகள் (மா.தி.க.) முதலியன தொடர்பான உயிரணுத்திணிவுச் சக்தி மதிப்பீடு வட மத்திய மாகாணத்தில் நிறைவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
|  |  |
| **மீதொட்டமுல்லையிலுள்ள மாநகர திண்மக் கழிவுகளைப் பிரித்தல்** | **வட மத்திய மாகாண விவசாய கழிவுகள் மதிப்பீடு** |

**4 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி சேவைகள்**

கிராமிய மக்களுக்கும், வீடுகளுக்கும், சி.ந.தொ. தொழில்முயற்சிகளுக்கும், விவசாயத் துறை போன்ற பிரிவுகளுக்கான சக்தி சேவைகளின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு, இ.நி.வ.அ.ச. பின்வரும் கருத்திட்டங்களினூடாக தலையிடுகின்றது.

I. தேசிய க்றிட் மின்சார முறைமைக்கான மின்சார அணுகு வசதியற்ற பகுதிகளுக்கு ஓப்-க்றிட் (சுனித்தியாலோக்க) மின்சாரத் தீர்வுகளின் மூலம் மின்சார வசதிகளை வழங்குதல்.

II. ந.தொ.மு. மற்றும் கிராமிய கைத்தொழில் ஆகியவற்றுக்கான RE மின்சாரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

III. இ.மி.ச. லெகோ நிறுவனம் ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில் தேறிய மின்சார மாணிவாசிப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

IV. ஏற்கெனவேயிருக்கின்ற சக்தித் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்து அடிப்படை சக்தித் தேவைகள் (மாகாண உயிரணுத்திணிவுச் சக்தி நிகழ்ச்சித்திட்டம்) தொடர்பில் RE தீர்வுகளை அறிமுகப்படுத்துதல்.

2015 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

- ✓ ஊவா மாகாண சபையின் கூட்டொத்துழைப்பில், நுண் நீர்வலு கருத்திட்டத்தின் மூலம், ஹப்புத்தள புதுலுதென கிராமத்தில் 25 வீடுகளுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டன.
- ✓ 200 கிராம சுனித்தியாலோக்க நீர்வலு கருத்திட்ட மதிப்பாய்வு நிறைவு செய்யப்பட்டது. குறித்த மதிப்பாய்வுக்கு இணங்க காணப்படும் விபரங்கள்:

- 371 கி.வொ. சக்திக் கொள்திறனுடைய இயங்கும் ஸ்தலங்களின் எண்ணிக்கை: 94
- மின்சாரம் வழங்கப்பட்ட மின்சார நுகர்வோர் எண்ணிக்கை : 2,457
- 1,335 கி.வொ. சக்திக் கொள்திறனுடைய கைவிடப்பட்ட ஸ்தலங்களின் எண்ணிக்கை: 106
- 83 கி.வொ. சக்திக் கொள்திறனுடைய க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட மின்சார முன்னோடிக் கருத் திட்டங்களின் எண்ணிக்கை: 3

✓ கற்பிட்டி பத்தளங்கண்டுவ தீவுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கான முற்சாத்தியவள அறிக்கை தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டது. ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முறைமை அமைப்பிலிருந்து (JICS) மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கருத்திட்டப் பிரேரணைகள் ஒப்படைக்கப்பட்டன. உத்தேசிக்கப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கலப்பு மின்னுற்பத்திப் பொறித் தொகுதியின் (காற்று சக்தி, சூரிய சக்தி முதலியன) சக்திக் கொள்திறன் அளவு 180 கி.வொ. ஆகும். இதிலிருந்து 650 குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்க முடியும்.

✓ கற்பிட்டியிலுள்ள உச்சமுனை ரொட்டப்பாடு ஒல்லாந்தர் குடா தீவுகளில் வசிக்கும் 385 குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்கவதற்கான ஆய்வு அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது, 01 ஆம் கட்டமாக, 173 வீடுகளில் சூரிய சக்தி வீட்டு மின்சார முறைமைகளை நிறுவும் பணி நிகழ்ந்து வருகின்றது.

✓ சி.ந.தொ. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், குருனாகல் போதனா வைத்தியசாலையில் ஒரு உயிரணுத்திணிவுச் சக்தி நீர் கொதிகலன் நிறுவப்பட்டது.

✓ தென் மாகாண சபை, ஜயவர்த்தபுன பல்கலைக்கழகம், மகா இலுப்பள்ளம் வயல் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகம், விவசாய தொழில்நுட்ப கிராமிய விஞ்ஞானங்களுக்கான (கொழும்பு பல்கலைக்கழகம்) விவசாயத் தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றில் அனல் சக்தி உபகரணங்களை நிறுவுவது தொடர்பில் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

- ✓ வத்துருகம திக்கந்த என்ற இடத்தில் க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட 80 கி.வொ. கொள்திறனுடைய உயிர் எரிவாயு பொறித் தொகுதி தொடர்பில் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

- ✓ 'மாகாண உயிரணுத்திணிவுச் சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின்' கீழ் 50 இற்கு அதிகமான உயிர் எரிவாயு அலகுகள் தாபிக்கப்பட்டு, வட மேல் மாகாணத்தில் 20 கொத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

- ✓ உயிர் எரிவாயு பற்றிய நான்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு 515 பயிர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

- ✓ சூரிய சக்தி மாணிவாசிப்பில் சம்பந்தப்படுகின்ற சூரிய சக்தி பி.வி. சேவைகளை வழங்கும் 91 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன.

- ✓ சூரிய சக்தி மாணிவாசிப்பு நிறுவுகை தொடர்பில் (ஸ்தலப் பரிசீலனைகள் அடங்கலாக) 12 அரச நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.
- ✓ வேண்டுகோளின் பேரில், பல நிறுவனங்களுக்கு, கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.



**கிராமிய நீர்வலு பற்றிய மதிப்பாய்வு**




**கிராமிய நீர்வலு ஸ்தலங்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்ட இறுதி வரைபடம்**



ஹப்புத்தள பதுலுதென கிராமத்திலுள்ள 25 வீடுகளுக்கு மின்சார வசதி



உச்சிமுனைத்தீவு



வினைத்திறன்வாய்ந்த உயிர் எரிவாயு அடுப்புகள் பகிர்ந்தளிப்பு



க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட உயிர் எரிவாயு மின்னுற்பத்திப் பொறித் தொகுதி



உயிர் எரிவாயு தொடர்பில் பயிற்சி பெறும் கொத்தர்கள்



தேறிய மாணிவாசிப்பு வசதி (மகாஇலுப்பள்ளம்)

| | |
|---|---|
| |  தென் பிராந்திய பெண் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கான உலர்த்திகள் பகிர்ந்தளிப்பு  குருனாகல் போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்ட ஒரு உயிரணுத்திணிவுச் சக்தி கொதிகலன் |
| 4 | **நன்கொடை நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**<br><br>ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ.) நிதியளித்த இரண்டு பிரதான RE அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இ.நி.வ.அ.ச. சபையினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்தக் கருத்திட்டங்கள் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றன. இந்த இரண்டு கருத்திட்டங்களும் பின்வருமாறு:<br><br>1. வீட்டுக் கூரை மீது நிறுவக்கூடிய சூரிய சக்திப் பலகை மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத்திட்டம்<br>2. தோட்டப் பகுதி சிறிய நீர்வலு புனர்நிர்மாண மற்றும் மீள்சக்தியளிக்கும் கருத்திட்டம்<br><br>**வீட்டுக் கூரை மீது நிறுவக்கூடிய சூரிய சக்திப் பலகை மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத்திட்டம்**:<br>இந்தக் கருத்திட்டத்தின் கீழ், இ.நி.வ.அ.ச. இலங்கையில் பொட்டோவொல்டிக் மைய மின்னுற்பத்தியை வகைப்படுத்தி முன்னுரிமைப்படுத்தும் நோக்கில், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் சூரிய சக்தி பி.வி. முன்னோடிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. அரச துறை ஆக்கக்கூறு அடிப்படை ரீதியில் முதன்னிலை வகிக்கின்ற தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடங்களில் ஒருமுகப்பட்டுக் காணப்படும். பின்வருவன இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றன.<br>✓ வீட்டுக் கூரையில் நிறுவக்கூடிய சூரிய சக்தி முறைமைகளை நிறுவும் பொருட்டு தனியார் துறை நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் விடயம் நிறைவு செய்யப்பட்டதுடன் அத்தகைய நிறுவனங்கள் ஸ்தல விஜயங்களினூடாக உறுதிசெய்யவும்பட்டன. |

- ✓ MAS ஹோல்டிங்ஸ், ப்ரான்டிக்ஸ் அபெரெல் சொலூஷன்ஸ், கெக்கூன் விலா ஹோட்டல் மற்றும் சிற்றி ஹோட்டல் ஆகியவற்றில் இந்த முறைமைகள் நிறுவுகைப் பணி நிறைவு செய்யப்பட்டது.

- ✓ ஏசியா பைக் (ப்ரைவட்) லிமிற்றட், மியாமி க்லோத்திங் (ப்ரைவட்) லிமிற்றட், ஒரேன்ஜ் பீல்ட் ரீ பெக்டரி என்ட் மீஷான் (ப்ரைவட்) லிமிற்றட் ஆகிய கம்பனிகளுக்கு அவ்றறின் கருத்திட்டங்களை முன்னெடுத்து **செல்வதற்கான** அறிவித்தல் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சூரிய சக்தி பொட்டோ வொல்டிக் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் வடிவமைப்பு, விநியோகம், நிறுவுகை மற்றும் ஆரம்பித்து வைத்தல் தொடர்பான பணி ஒப்பந்தம் சன் பவர் சிஸ்டெம்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

- ✓ கருத்திட்டத்திற்காக பங்குபற்றுகின்ற நிதி நிறுவனமாக சம்பத் வங்கி பிஎல்சி தேர்ந்தெடுக்கப்பட்டது. திறைசேரிக்கும் இ.நி.வ.அ.ச. சபைக்கும் இடையில் இ.நி.வ.அ.ச. துணைக் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



*பள்ளேகெல மாஸ் ஹோல்டிஹ்ஸ் - சூரிய சக்தி முறைமை நிறுவுகை*



*கொழும்பு 1, சிற்றி ஹோட்டல் - சூரிய சக்தி முறைமை நிறுவுகை*

**தோட்டப் பகுதி சிறிய நீர்வலு புனர்நிர்மாண மற்றும் மீள்சக்தியளிக்கும் கருத்திட்டம்**

கைவிடப்பட்டுள்ள 19 சிறிய நீர்வலு உற்பத்திக் கருத்திட்டங்களைப் புனர்நிர்மாணித்து, 1.3 மெ.வொ. மின்சாரத்தை வழங்கும் வகையில் க்றிட் மின்சார முறைமைக்கு இணைப்பது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். 2015 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

- ✓ சகல முற்சாத்தியவள அறிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டன.
- ✓ அறிக்கைகள் அவற்றின் கடன் நடைமுறைகளின் நிமித்தம் NDB இற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- ✓ NDB எம்பிலிபிட்டிய தோட்டத்திற்கு கடனை வழங்க அங்கீகரித்தது.

- ✓ பெருந்தோட்டக் கம்பனிகளுடனான ஒவ்வொரு கருத்திட்டங்களுக்குமான ஒப்பந்தத் தரப்புகளை சேர்த்துக்கொள்ளும் ESCO நடபடிமுறை ஆரம்பிக்கப்பட்டது.





**தேயிலைத் தோட்டங்களிலுள்ள சிறிய நீர்வலு கருத்திட்டங்களின் தற்போதைய நிலை**

மேலும், 'நிலைபெறுதகு உயிரணுத்திணிவுச் சக்தி உற்பத்தி மற்றும் நவீன உயிரியல் - சக்தித் தொழில்நுட்பம் மற்றும் 'இலங்கையில் முடிவுப் பயன் துறைகள் மற்றும் சக்தி உற்பத்தி ஆகியவற்றிலுள்ள சரியான தணிப்பு நடவடிக்கை' என்ற தலைப்பில் UNDP/GEF/FAO ஆகியன நிதியளித்த கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இ.நி.வ.அ.ச. குறித்த கருத்திட்டங்களுக்கான செயற்படுத்தும் ஒரு பங்காளித்துவத் தரப்பாக விளங்ககின்றது. பின்வரும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

**"நிலைபெறு உயிரணுத்திணிவுச் சக்தி உற்பத்தியையும் நவீன உயிரியல் சக்தித் தொழில்நுட்பங்களையும்" மேம்படுத்துதல்**

- ✓ பாரியளவான 3 கருத்திட்டங்களையும் எரிபொருள் பாவனையிலிருந்து உயிரணுத்திணிவுச் சக்திற்கு நகரும் SMI 16 கருத்திட்டங்களையும் செயற்படுத்தும் பொருட்டு இலங்கைக் காபன் நிதியத்துடன் பு.ஒ. கைச்சாத்திடப்பட்டுள்ளது.
- ✓ இலங்கையிலுள்ள கைத்தொழில்களில் நுகரப்படும் உயிரணுத்திணிவுச் சக்தியின் முழுமையான ஒரு மதிப்பீட்டு வரைபடத்தைத் தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ கைத்தொழில் பிரயோகங்களிலுள்ள உயிரணுத்திணிவுச் சக்தி பற்றிய 3 நாள் முழுமையான வேலையரங்குகள் (செயன்முறைப் பயிற்சிகள் அடங்கலாக) நடத்தப்பட்டுள்ளன.
- ✓ விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் தொடர்பான ஒரு பயிற்றுவிப்பாளர் பயிற்சி வேலையரங்கு சர்வதேச நிபுணர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.

மேலும், நிலைபெறுதகு விநியோக சங்கிலி தொடர்பான மூன்று வேலையரங்குகள் / கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

- ✓ சக்திப் பாதுகாப்பு தொடர்பான கொதிகலன் பராமரிப்பு பற்றிய அறிவு உற்பத்திகள் தொடர்பான ஆவணங்கள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டன.

- ✓ உயிரணுத்திணிவுச் சக்திக் கொள்கை இடைவெளிகளை அடையாளப்படுத்தும் பொருட்டு ஆலோசனை அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன.
    - ○ உயிரணுத்திணிவுச் சக்தி விநியோகச் சங்கிலிகளின் தற்போதைய நிலை
    - ○ உயிரணுத்திணிவுச் சக்தி தொடர்பான தேசிய கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள் (நிலப் பாவனை, பயிர்ச் செய்கை, போக்குவரத்து, தொழில்நுட்பப் பாவனை) என்பன பற்றிய பின்னணி ஆவணம்
    - ○ உயிரணுத்திணிவுச் சக்திப் பாதுகாப்பு மற்றும் விநியோகச் சங்கிலி ஆகியவற்றிலுள்ள தொழில்நுட்பம் சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை

- ✓ கீழ்காணும் விடயங்கள் தொடர்பான உசாதுணை சார்ந்த சேவைகளுக்கான வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.
    - ○ உயிரணுத்திணிவுச் சக்தி சம்பந்தமான தற்போதைய செயற்பாடுகள் பற்றிய வரைபடத்தைத் தயாரித்தல் - கருத்திட்ட இணைப்புகளும் உதவிகளும்
    - ○ உயிரணுத்திணிவுச் சக்தி தொடர்பில் தேவையான பயிற்சி மதிப்பீடு
    - ○ கைத்தொழில் மற்றும் அனல் சக்திப் பிரயோகங்களில் உயிரணுத்திணிவுக் கச்தி பற்றிய சூழ்நிலைப் பகுப்பாய்வு
    - ○ இலங்கையில் உயிரணுத்திணிவுச் சக்திப் பாதுகாப்பு முறைமைகளிலுள்ள தொழில்நுட்பப் பயன்பாடு

- ✓ உயிரணுத்திணிவுச் சக்தி சம்பந்தப்பட்ட உபகரணங்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஈடுபடும் மின்னொளி சக்தி உற்பத்திக் கம்பனிகள் தொடர்பான ஒரு தரவுத்தளத்தை நிறுவும் பணி நிறைவு செய்யப்பட்டது.



**மார்ச் மாதம் 19 முதல் 21 ஆம் திகதி வரை துல்ஹிரிய MAS பப்ரிக் பார்க் வளாகத்தில் நடைபெற்ற உயிரணுத்திணிவுச் சக்தி பற்றிய வேலையரங்கில் பங்குபற்றியவர்கள்**




"இலங்கையின் கைத்தொழில்களில் நுகரப்படும் உயிரணுத்திணிவுச் சக்தி" மற்றும் சக்திப் பாதுகாப்புக்கான புக் கொதிகலன் இயக்குநர் ஆகியன தொடர்பான வரையும் மதிப்பீடும் பற்றிய அறிக்கை

**"இலங்கையில் முடிவுப் பயன் துறைகள் மற்றும் சக்தி உற்பத்தி ஆகியவற்றிலுள்ள சரியான தணிப்பு நடவடிக்கை"** தொடர்பான கருத்திட்டம்

- MACC மற்றும் MRV சேவை வழங்கும் தரப்புகளை வாடகைக்கு அமர்த்துவது தொடர்பான RFP குறிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

- உயர் வினைத்திறன் வாய்ந்த மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு கேள்வி விலை மனுக்கள் அழைக்கப்பட்டன. அது தொடர்பில் கிடைக்கப்பெற்ற அத்தகைய கேள்வி விலை மனுக்கள் குறைந்தளவான பல்லினத்துவமுடைய பிரேரணைகளாக காணப்பட்டதால், வாபெஸ் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

- உயிரணுத்திணிவுச் சக்தி அலகுகளை பரம்பல் செய்வது தொடர்பான பு.ஒ. தயாரிக்கப்பட்டு, தென் மாகாண சபைக்கு அதன் மீளாய்வின் நிமித்தம் அந்த பு.ஒ. சமர்ப்பிக்கப்பட்டது.

- NAMA நிறுவனத்தைத் தாபிக்கும் பொருட்டு அக்கறையுடைய தரப்புகளின் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய கூட்டங்களில் இ.நி.வ.அ.ச., CCS, போக்குவரத்து அமைச்சு, SCF, ஆகியவற்றின் அலுவலர்களும் ஏனைய முக்கியமான நபர்களும் பங்குபற்றினர்.

***சக்தி வினைத்திறன் மேம்பாடு (EnMAP இன் கீழ்)***

சக்தி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதனூடாக 2015 ஆம் ஆண்டில் பின்வரும் ஒட்டுமொத்த சக்தி சேமிப்பு இலக்குகளை அடைய முடிந்தது.

| செயல்நடவடிக்கை | சேமிப்பு | |
|---|---|---|
| | வகை | பெறுமான அளவு |
| 50 நிறுவனங்களிலுள்ள துல்லியமான சக்தி முகாமையாளர்கள் | மின்சாரம் | 10 ஜி.வொ.ம. |
| SLNEEA விருது வழங்கும் திட்டம் | மின்சாரம் | 9 ஜி.வொ.ம. |
| | டீசல் | 35,663 லீற்றர் |
| | உலை எண்ணெய் | 2 மில்லியன் லீற்றர் |
| | எரிவிறகு | 9 மில்லியன் கி.கி. |

**1** **சக்தி முகாமைத்துவ முறைமைகள் தாபிப்பு**

இ.நி.வ.அ.ச. ISO50001 சக்தி முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்தி வர்த்தகம், கைத்தொழில் மற்றும் வீட்டுத் துறை ஆகிய துறைகளில் சக்தியைப் பாதுகாப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

- ✓ 2015 ஆம் ஆண்டு இறுதியளவில் மொத்தம் 200 சக்தி முகாமையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- ✓ சக்திக் கணக்காய்வாளர்களுக்கான 2 பயிற்சி நிறுவகங்களும் மற்றும் சக்தி முகாமையாளர்களுக்கான 1 பயிற்சி நிறுவகமும் பதிவு செய்யப்பட்டன.
- ✓ 5 கைத்தொழில் பிரிவுகளுக்கான சக்தி நுகர்வு பற்றிய அடிப்படைகள் வகுத்தமைக்கப்பட்டன.
- ✓ சக்தி முகாமையாளர்களுக்கான சக்தி முகாமையாளர் கூட்டங்களும் மற்றும் 3 குறுகிய விரிவுரைகளும் நடத்தப்பட்டன.






**சக்தி முகாமையாளர்கள் கூட்டம்** **சக்தி நுகர்வு தகவுதிறன் கைந்நூல்கள்**

| | |
|---|---|
| 2 | **நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்**<br><br>கைத்தொழில், வீட்டு, வர்த்தகத் துறை போன்ற துறைகளில் சக்தி வினைத்திறன் மேம்பாட்டைப் பேணும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அடங்கலாக சரியான ஒழுங்குறுத்துகைத் தலையீட்டு நடவடிக்கைகளை வகுத்தமைக்கும் பொருட்டு இ.நி.வ.அ.ச. சபையினால் வித்தியாசமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>✓ CFL சக்தி முத்திரையிடும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. நட்சத்திரக் கணிப்பீடு தொடர்பான தகவுதிறன்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.<br><br>✓ குளிர்சாதனப் பெட்டிகளுக்கான நட்சத்திர கணிப்பீடு தொடர்பான தகவுதிறன்களை நிர்ணயிக்கும் பொருட்டு குளிர்சாதனப் பெட்டி சார்ந்த பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>✓ கூரை மின்விசிறி சோதனை ஆய்வுகூடம் ஒன்றைத் தாபிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.<br><br>✓ குமிழ் மின்விளக்குகள் மற்றும் ப்ளரஷென்ட் மின்விளக்கு ப்லாஸ்ட்டுகள் என்பவற்றுக்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>✓ LED மின்விளக்குகளுக்கான ஆகக்குறைந்த சக்தி செயல்திறன் நியமங்களை (MEPS) அறிமுகப்படுத்துவதற்கான ஒரு அக்கறையுடைய தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டது.<br><br>✓ அறைகளில் பயன்படுத்தும் குளிரூட்டி சாதனங்கள் மற்றும் கணனிகள் என்பவற்றுக்கான சக்தி முத்திரையிடும் நியமங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>✓ “இலங்கையில் சக்தி வினைத்திறன் வாய்ந்த கட்டிடங்களுக்கான செயன்முறை விதிக்கோவை - 2008’ மீளாய்வு செய்யப்படுவதற்கான பணி ஒப்பந்தம் வழங்கப்பட்டது.<br><br>✓ “இலங்கையில் நிலைபெறுதகு சக்தி வதிவிடங்களுக்கான வழிகாட்டிகள்” ஆவணம் தயாரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| | ✓ மோட்டார் மின்சுற்றுக்கள் சுற்றுதல் தொடர்பான ஒரு கைந்நூல் தயாரிக்கப்பட்டது.<br><br>✓ 6 நிறுவனங்களில் ISO50001 என்ற சக்திக் கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. |
| 3 | **ஆலோசனை மற்றும் உசாதுணை சார்ந்த சேவைகள்**<br><br>இ.நி.வ.அ.ச. கேள்விகளுக்கு பதிலளித்தல், வேண்டுகோளின் பேரிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ISO 50001 சக்திக் கணக்காய்வுகளில் கலந்துகொள்ளல் முதலிய நடவடிக்கைகளினூடாக உசாதுணை சார்ந்த சேவைகளை வழங்குவதன் மூலம் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் அரச துறை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு, அவற்றின் சக்தி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுகின்றது.<br><br>✓ அரசாங்க நிறுவனங்கள் 15 சக்திக் கணக்காய்வுகள் நிறைவு செய்யப்பட்டன.<br><br>✓ EEI, EES மற்றும் TP ஆகிய வகுதிகளின் கீழ் 31 ESCO கள் பதிவு செய்யப்பட்டன. அத்தகைய கம்பனிகளின் பட்டியல் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.<br><br>✓ மோட்டார் மின்சுற்றுக்கள் சுற்றுவது பற்றிய சிறந்த செயன்முறை தொடர்பான 2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.<br><br>✓ சக்திக் கணக்காய்வு சார்ந்த செயற்பாடுகளுக்கான கருவி சாதனங்கள் களஞ்சிய நிலையத்தைப் பராமரித்தல். |



*மோட்டார் மின்சுற்று சுற்றுகை தொடர்பான சிறந்த செயன்முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்*

4 **சாதனைகளுக்கான விருது வழங்கல்**

இ.நி.வ.அ.ச. இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருதுகள் வழங்கும் (SLNEEA) திட்டத்தை நடைமுறைப்படுத்தி கைத்தொழில், வர்த்தகம் அகிய துறைகளில் சக்தி முகாமைத்துவ செயன்முறைகளை ஊக்குவிக்கின்றது.

- ✓ பிரதம அதிதியாக மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் பங்குபற்றலில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ப.ச.ஞா.மா.ம. மண்டபத்தில் SLNEEA வைபவம் நடத்தப்பட்டது. சக்தி சேமிப்பில் அடைந்த அவற்றின் குறிப்பிடத்தக்க சாதனைகளின் நிமித்தம், தேசிய சக்தி வினைத்திறன் விருது (NEEA), சிறந்த சக்தி சேவைகள் கம்பனி (ESCO) விருது, குறித்த ஆண்டின் பிரத்தியேக சக்தி முகாமையாளர் விருது என்பன போன்ற விருதுகள் வழங்கப்பட்டன. சக்தித் துறையில் மிகவும் பிரபல்லியமான இரண்டு தரப்புகளுக்கு வாழ்நாள் கால சாதனை அடைவு விருதுகள் வழங்கப்பட்டன.



**2015 இலங்கை தேசிய சக்தி வினைத்திறன் வெற்றி விருதுகள்**

| | |
|---|---|
| 5 | **சக்தித் துறை குறித்த சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்**<br><br>இ.நி.வ.அ.ச. மாகாண மட்டத்தில் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தும் பொருட்டு உதவுகின்றது.<br><br>✓ “தேயிலைத் தோட்டப் பிரிவு” என்ற சக்தி முகாமைத்துவத்திட்டத்தின் முதல் கட்ட நிகழ்ச்சித்திட்டம் தென் மாகாணத்தில் (2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29, 30 ஆம் திகதிகளிலும் மற்றும் மே மாதம் 15 ஆம் திகதியிலும்) நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தொழிற்சாலை முகாமையாளர்கள் மற்றும் தொழிற்சாலை அலுவலர்கள் என 30 ஊழியர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பயிற்சி நிறுவகத்தினால் (SLEMA) நடத்தப்பட்டது.<br><br>✓ “தேயிலைத் தோட்டப் பிரிவு” என்ற சக்தி முகாமைத்துவத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்ச்சித்திட்டம் மத்திய மாகாணத்தில் (2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1, 2, மற்றும் 20 ஆம் திகதிகளில்) நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தொழிற்சாலை முகாமையாளர்கள் மற்றும் தொழிற்சாலை அலுவலர்கள் என 30 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.<br><br>✓ வட மாகாணத்திலுள்ள அரச துறை நிறுவனங்களில் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் இரண்டு அக்கறையுடைய வேலையரங்குகள் நடத்தப்பட்டன.<br><br>✓ மேல் மாகாணத்திலுள்ள 4 அரச துறை நிறுவனங்களுக்காக (இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, ஸ்ரீ லங்கா ரெலிகம், பாதுக்க பிரதேச செயலகம்) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.<br><br>✓ வட மேல், மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் தொடர்பான மாகாண சக்தி முகாமைத்துவ செயல்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. |

 

**சக்தி முகாமைத்துவ செயல்திட்டங்கள் தயாரித்தல்**

6 **தேசிய சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்**

- ✓ கம்பஹா கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்ற தரப்புகளுக்கு 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி விருது வழங்கல் வைபவம் நடத்தப்பட்டு வெற்றி விருதுகள் வழங்கப்பட்டன. சித்திரப் போட்டியில் 2000 மாணவர்கள் வரைந்த 2000 சித்திரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 25 சிறந்த சித்திரங்களை உள்ளடக்கி 'பாட்ட சித்துவிலி' என்ற நூல் வெளியிடப்பட்டது. பிலியந்தல கல்வி வலயத்திலுள்ள 5 பாடசாலைகளில் சக்தி வினைத்திறன் பற்றிய மற்றுமொரு சித்திரப் போட்டி 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 05 ஆம் திகதி வரை நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் விருதுகள் வழங்கப்பட்டன.

- ✓ 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை சாரணர்களுக்கான இரண்டு வேலையரங்குகள் நடத்தப்பட்டன.

- ✓ சக்திப் பாதுகாப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஆகியன தொடர்பில் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கான தொடர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது வரை அத்தகைய 3 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் கள விஜயங்களும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஸ்தல விஜயங்களும் உள்ளடங்குகின்றன.

- ✓ "பளசக்தி நெனசக்தி" என்ற தலைப்பில் சாரணர்களுக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி ஒரு வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. இது வரைக்கும் அத்தகைய 12 நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.
- ✓ 100 முன்-பள்ளிக்கூட ஆசிரியைகளுக்கான ஒ ருவிழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

- ✓ சக்தி செய்திப்பத்திரிகை நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் 'சக்தி வினைத்திறன் வாய்ந்த சமையலறைகள்' என்ற தலைப்பில் இல்லத்தரசிகளுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி மஹரகம இளைஞர் மனறத்தில் நடத்தப்பட்டது.

- ✓ சக்திப் பாதுகாப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான மிகவும் நவீன தகவல் விபரங்கள் அடங்கிய "சங்ரக்ஷ மெகசின்' என்ற ஒரு சக்தி சஞ்சிகை 3 மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்பட்டது.

- ✓ கோட்டே மாநகர சபை 'பசுமை சக்தி வலயமாக' பிரகடனப்படுத்தப்பட்டது.

- ✓ பாதுகாப்புப் பிரிவுக்கான (தலைமைப் பாதுகாப்புப் பதவியணியின் அலுவலகத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- ✓ கட்டுநாயக்க விமானத் தளத்திலுள்ள விமானப் படை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு சக்திக் கணக்காய்வு மற்றும் சக்தி முகாமைத்துவம் ஆகியன தொடர்பான ஆரம்பப் பயிற்சி நடத்தப்பட்டதுடன் செய்துகாண்பிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

- ✓ மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் கிராமங்கள் திட்டமிடல் பிரிவு மாணவர்களுக்கு சக்தி முகாமைத்துவம் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி நடத்தப்பட்டது.

- ✓ சக்திப் பாதுகாப்பு பற்றிய ஒரு சுற்றறிக்கை அரச நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டது. மாவட்ட செயலகங்களுக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

- ✓ சக்தி முகாமைத்துவம் மற்றும் சக்திப் பாதுகாப்பு ஆகியன தொடர்பான ஒரு நிகழ்ச்சித்திட்டம் இராணுவ உத்தியோகத்தர்களுக்காக பனாகொட இராணுவ முகாமில் நடத்தப்பட்டது.
- ✓ பவுசர் உரிமையாளர்கள், பஸ் சாரதிகள் மற்றும் முற்சக்கர வண்டி உரிமையாளர்கள் ஆகிய சங்களுக்காக போக்குவரத்துத் துறையில் சக்தி முகாமைத்துவமும் சக்தி வினைத்திறன் மேம்பாடும் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- ✓ எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோருக்கு மத்தியில் சக்தி சேமிப்பு பற்றிய துண்டுப்பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- ✓ சகல பௌத்த தம்ம பாடசாலைகளுக்கும் 'சக்தியை சேமிப்பது தொடர்பான கட்டுரைப் போட்டி' பற்றிய சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு, நாடளாவிய ரீதியில் 9000 சுவரொட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



**'பளசக்தி நெனசக்தி' வானொலி நிகழ்ச்சி'**



**'சக்தி வினைத்திறன் சமையலறை' நிகழ்ச்சித்திட்டம்**



**கல்வி வலயங்களில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி**




**சக்தி சேமிப்பு பற்றிய கட்டுரைப் போட்டி**

| | |
|---|---|
| 7 | **ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளல்**<br><br>இலங்கையில், போக்குவரத்துத் துறையில் சக்தி முகாமைத்துவ அபிவிருத்தியின் நிமித்தம் புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் சாத்தியம் பற்றி ஆராய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>✓ கொழும்பு மாநகரப் பிரதேசத்திற்கான ஒரு வாகனம் ஓட்டல் வட்டம் உருவாக்கப்பட்டது.<br>✓ $E^3ST$ பற்றிய ஒரு சர்வதேச கருத்தரங்கு (சக்தி வினைத்திறன் மற்றும் சூற்றாடல் ரீதியில் நிலைபெறுதகு போக்குவரத்து) 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. |
| 8 | **முன்னோடிக் கருத்திட்டங்கள் தாபிப்பு**<br><br>மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி அல்லது இணைந்த குளிராக்கல் வெப்ப மற்றும் சக்தி (CCHP) திட்டம் ஒரேநேரத்தில் நிகழும் மின்சார உற்பத்தி, ஒரு சக்தி மூலத்திலிருந்து வரும் பயனுள்ள வெப்பம் மற்றும் குளிராக்கல் ஆகியவற்றுடன் தொடர்புபடுகின்றது. இதுவே சக்தியின் அனுகூலமான பயன்பாடு நிமித்தம் கிடைக்கக்கூடிய மிகச்சிறந்த முறையியலாகும். இதன் மூலம் 80% வீதத்திற்கும் அதிகமான சக்தி வினைத்திறனை அடைய முடியும். இந்த நிலையில், ஹோட்டல்கள், புடவைத் தொழிற்சாலைகள், மற்றும் கைத்தொழில் வலயங்கள் முதலியன போன்ற துறைகளுக்கு மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தியை அறிமுகப்படுத்தும் சாத்தியங்கள் பற்றி ஆராய்வதற்கு இ.நி.வ.அ.ச. தீர்மானித்துள்ளது.<br><br>முக்கியமாக ஒருமுகப்படும் செயற்பாடுளில் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.<br><br>1. இலங்கையில் ஹோட்டல் கைத்தொழிலின் நிமித்தம் மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி முறைமைகளை செயற்படுத்துவதற்கான சாத்தியவள ஆய்வு<br>2. இலங்கையில் கைத்தொழில் வலயங்களின் நிமித்தம் மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி முறைமைகளை செயற்படுத்துவதற்கான சாத்தியவள ஆய்வு<br>3. மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தியிலான கருத்தரங்குகள்<br><br>இலங்கையில் ஹோட்டல் கைத்தொழிலின் நிமித்தம் மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி முறைமைகளை செயற்படுத்துவதற்கான சாத்தியவள ஆய்வு 2015 ஆம் ஆண்டு மே மாதமளவில் எல்ஜே எனெர்ஜி லங்கா (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. |

- ✓ 'மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி தொடர்பான கருத்தரங்கு' 2015 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி நடத்தப்பட்டது. இதில் ஹோட்டல் உரிமையாளர்கள், கைத்தொழில் உரிமையாளர்கள், சக்தி முகாமையாளர்கள், ESCO கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் முதலியோர் பங்குபற்றினர். ஏறக்குறைய 120 நபர்கள் பங்குபற்றினார்கள்.

- ✓ இலங்கையில், கைத்தொழில் வலயங்களுக்கான மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி முறையை செயற்படுத்துவது தொடர்பான சாத்தியவள ஆய்வுக்குரிய TOR ஐ தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.




**மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி பற்றிய கருத்தரங்கு**




**ஹோட்டல் துறையில் மூன்று-சக்தி-வள மின்னுற்பத்தி பற்றிய சாத்தியவள ஆய்வு**

| | *அறிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் (SEEK இன் கீழ்)* |
|---|---|

பாடசலைப் பாடவிதான அபிவிருத்தி

சக்தி பற்றிய கல்வி தொடர்பான ஒரு சுய முறைமையை உருவாக்கும் பொருட்டு ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலைப் பாடசாலைப் பாடவிதானங்களில் சக்தி சம்பந்தப்பட்ட அறிவையும் செயற்பாடுகளையும் உள்ளீர்ப்பது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

- ✓ 6 ஆம் மற்றும் 10 ஆம் தரங்களில் விஞ்ஞான பாட மொடியூலுக்கு சக்தி பற்றிய அறிவும் செயற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் புதிய பாடவிதானங்களின் கீழ் ஏற்கெனவே அரச பாடசாலைகளில் செயற்படுத்தப் பட்டுள்ளது. 7 ஆம் மற்றும் 11 ஆம் தரங்களில் விஞ்ஞான பாட மொடியூலுக்கு சக்தி பற்றிய அறிவும் செயற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

- ✓ ஏனைய தரங்களுக்கும் (தரம் 8 மற்றும் தரம் 9) சக்தி தொடர்பான செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சக்தி பற்றிய ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல்

மாணவர்களையும் ஆசிரியர்களையும் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் சக்தி முகாமைத்துவத்திலும் மற்றும் RE சக்திப் பாவனையிலும் ஈடுபடச்செய்யும் முகமாக பாடசாலைச் சக்திக் குழுக்கள், சக்தித் தினக் கொண்டாட்டம், 'சக்தி நட்சத்திர' போட்டி என்பன அடங்கிய ஒரு முழு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- ✓ கல்வி அமைச்சின் செயலாளரினால் 06/2015 ஆம் இலக்கக் கல்விச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் சக்தி பற்றிய கல்வி நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி கல்வி முறைமையினுள் உத்தியோகபூர்வ ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, தரம் 6, அதற்கு மேற்பட்ட தரங்களைக் கொண்டுள்ள சகல அரச பாடசாலைகளுக்கும் பாடசாலைச் சக்திக் குழு நிகழ்ச்சித்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2015 ஆம் ஆண்டு முதல் 7000 அரச பாடசாலைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகுதி பெறும்.

- ✓ குறித்த சுற்றறிக்கை 7000 பாடசாலைகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- ✓ பாடசலைகளிலிருந்து 1800 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவற்றில் 800 சக்திக் குழுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் அத்தகைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ✓ கல்வி அமைச்சின் கூட்டொத்துழைப்பில் மாகாண மட்ட செயற்படுத்துகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- ✓ கல்வி அமைச்சினதும் மற்றும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினதும் கூட்டொத்துழைப்பில் விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு ஆறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (300 பங்குபற்றுநர்கள் - விஞ்ஞான ஆசிரியர்கள் மற்றும் விஞ்ஞாபனப் பாடத்திற்கான பணிப்பாளர்கள்) நடத்தப்பட்டன.

- ✓ ITN மற்றும் தேசிய ரூபவாஹினி ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஒரு ஊடக நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.





நிலைபெறுதகு சக்தி வலயம் (நி.ச.வ.) - கோட்டே

சக்தி உள்ளுணர்வுடைய சமூகத்தை உருவாக்குவதற்கும் பொருளாதார எண்ணக்கரு தொடர்பான சுற்றறிக்கையை அறிமுகப்படுத்தி செயன்முறைப்படுத்துவதற்கும் என கோட்டே பிரதேசத்தில் நி.ச.வ. களுக்கான ஒரு முன்னோடிக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- ✓ கோட்டே மாநகர சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த்தை (பு.ஒ.) ஏற்படுத்தி நி.ச.வ. களின் தாபிப்பு இலகுபடுத்தப்பட்டது.
- ✓ குறித்த வலயத்தில் ஒரு சக்தி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 10 சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டன.
- ✓ கிராம உத்தியோகத்தர்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.
- ✓ சகல அரச நிறுவனங்களுக்கும் தொடர்பாடல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். சகல அரச நிறுவனங்களுக்கும் சக்திக் கணக்ககாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ✓ கோட்டே நி.ச.வ. வதிவிடங்களின் சக்திப் பாவனை முறையை இனங்காணும் பொருட்டு ஒரு முன்னோடி மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.



*சக்திப் பாவனை பற்றிய முன்னோடி மதிப்பாய்வு*



*கோட்டே பிரதேச பாடசாலைகளுக்கான சக்தி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்*

ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் நன்மதிப்பைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்

இ.நி.வ.அ.ச. மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு நடத்திய தேசிய சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய பங்காளித்துவத் தரப்பாக விளங்கியது. பின்வரும் பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- ✓ ப.ச.ஞா.மா.ம. மண்டபத்தில் 1000 பாடசாலை மாணவர்களுக்கு கௌரவ அப்துல் கலாம் அவர்களின் விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டது.

- ✓ கொழும்பு 3 மகானாம கல்லூரியில் தேசிய சக்தி உறுதிமொழி வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- ✓ மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியையும், சக்தி முகாமைத்துவத்தையும் ஊக்குவிப்பதற்கான 'சுற்றாடல் தினக் கண்காட்சியில்' கண்காட்சிக் கொட்டகைகள் காட்சிப்படுத்தப்பட்டு, கண்காட்சியில் கலந்துகொண்ட பொது மக்களுக்கு மத்தியில் 5000 துண்டுப்பிரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- ✓ பாடசாலை மாணவர்களுக்கு தேசிய சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- ✓ மத்திய மாகாணத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியில் கண்காட்சிக் கொட்டகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

- ✓ அதிகார சபைக்கு நன்மதிப்பைக் கட்டியெழுப்பும் வழிமுறையாக நியம நிகழ்ச்சி முகாமைத்துவ வழிகாட்டலுக்கு இணங்க சகல பாரிய நிகழ்ச்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன.



| | *நிலைபெறுதகு சக்திக் கொள்கைகளையும் திறமுறைத்திட்டங்களையும் தயாரித்தல் (SAFE இன் கீழ்)* |
|---|---|
| சி.ந.தொ. முயற்சிகள் துறைக்கான RE தீர்வுகள் | | 1,282,438 |
| இ.மி.ச. சபையின் கூட்டொத்துழைப்பிலான தேறிய மாணிவாசிப்புத் தீர்வுகள் | | 447,380 |
| ஏற்கெனவேயிருக்கின்ற தொழில்நுட்பங்களை மதிப்பிட்டு RE தெரிவுகளை அறிமுகப்படுத்துதல் | | 1,539,438 |
| மாகாண உயிர் எரிவாயு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 6,290,312 |
| சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு (தனியார்) துறை வசதி | | 159,832 |
| சக்தித் துறைத் துணைக் கருத்திட்டம் | | 28,385 |
| தூய சக்தி வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம் | | 315,616 |
| குவான்டெம் லீப் நிகழ்ச்சித்திட்டம் - காற்று சக்தி மதிப்பீட்டுக் கருத்திட்டம் | | 23,407 |
| UNDP | | 1,046,043 |
| அம்பாந்தோட்டை RE ஸ்தல இயக்கச்செயற்பாடு | | 12,261,613 |
| இந்துரான RE ஸ்தல இயக்கச்செயற்பாடு | | 1,863,758 |
| நிலைபெறுதகு உயிரணுத்திணிவுச் சக்தி ஊக்குவிப்பு | | 59,600.00 |
| 1 வள ஒதுக்கீடும் அபிவிருத்தியும் | 551,826 | |
| 2 முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு | 210,453 | |
| 3 தொழில்நுட்ப அபிவிருத்தியும் ஆராய்ச்சியும் | 1,762,389 | |
| 4 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி சார்ந்த சேவைகள் | 10,280,995 | |
| 5.1 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் | 3,106,625 | |
| 5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் | 4,388,732 | |
| 5.5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் | 3,185,627 | |
| 5.5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் | 39,000 | |
| 6 அம்பாந்தோட்டை RE ஸ்தல இயக்கச்செயற்பாடு | 6,766,182 | |
| 7 இந்துரான RE ஸ்தல இயக்கச்செயற்பாடு | 1,597,884 | |
| | - | |
| | 31,889,713 | 60,504,996 |

| | 2015 | 2014 |
|---|---|---|
| **சக்தி முகாமைத்துவம்** | | |
| சக்தி முகாமைத்துவ வட்டங்களின் தாபிப்பு | | 7,303,385 |
| நியமங்கள் ஒழுங்குவிதிகள் அறிமுகம் | | 3,696,855 |
| ஆலோசனை உசாதுணை சேவைகள் வழங்கல் | | 2,080,604 |
| சாதனைகளுக்கான விருதுகள் வழங்கல் | | 1,392,573 |
| ISO 5001 ஊக்குவிப்பு | | 463,683 |
| ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளல் | | 3,036,384 |
| எதிர்காலத்திற்கான முன்னோடிக் கருத்திட்டத்தின் தாபிப்பு | | 72,926 |
| சந்தை மைய சக்தி உபகரணங்களை அறிமுகப்படுத்துதல் | | 1,200 |
| சக்திப் பாதுகாப்பு நிதிகள் | | |
| 1 சக்தி முகாமைத்துவ வட்டங்கள் | 6,939,616 | |
| 2 நியமங்களும் ஒழுங்குவிதிகளும் | 611,912 | |
| 3 ஆலோசனையும் உசாதுணையும் | 72,862 | |
| 4 சாதனைகளுக்கான விருது வழங்கல் | 7,141,977 | |
| 5 துறை சார்ந்த விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,711,166 | |
| 6 ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 2,098,844 | |
| 7 முன்னோடிக் கருத்திட்டங்களின் தாபிப்பு | 780,263 | |
| 8 சக்திக் கணக்காய்வு | 2,598,873 | |
| | 21,955,513 | 18,047,610 |

| | 2015 | 2014 |
|---|---|---|
| **அறிவு முகாமைத்துவம்** | | |
| விதுல்கா சக்திக் கண்காட்சி | | 4,740 |
| சக்தி மாநாடு | | 125,000 |
| இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருதுகள் நிகழ்ச்சிகள் | | 150,000 |
| இலத்திரனியல் அச்சீட்டு ஊடக மூல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 44,300 |
| பாடசாலை மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | |
| அர மற்றும் கூட்டுத்தாபனத் துறைகளுக்ககான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 661,920 |
| பொதுமக்களுக்கான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | |
| கல்வி ஊக்குவிப்பு கருவிசாதனங்கள் தயாரிப்பு | | |
| உயிர் எரிவாயு உற்பத்தி | | |
| தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் | | 162,626 |
| 1 கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 9,994,530 | |
| 2 தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 4,812,136 | |
| | 14,806,666 | 1,148,586 |
| **பொருளாதார விவகாரங்கள்** | | |
| சக்திக் கொள்கைத் தலையீட்டு நடவடிக்கைகள் | | 1,519,346 |
| சக்தித் திட்டமிடுகையும் தாக்க மதிப்பீடும் | | 61,855 |
| சக்தி வினைத்திறன் வலயங்கள் தாபிப்பு | | 2,217,025 |
| பாடசாலை சக்திக் குழுக்கள் நிகழ்ச்சித்திட்டம் | | 4,211,392 |
| ஊடக மூல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | | 4,896,729 |
| விதுல்கா - 2014 | | 6,182,760 |
| கருத்திட்டச் செலவுகள் - ஆ.அ.வ. மானியம் | | 4,404,284 |
| கருத்திட்டச் செலவுகள் - தோட்டப் பகுதி நுண் நீர்வலு கருத்திட்டப் புனரமைப்பு | | 786,109 |
| சக்தித் தரவுகள், தகவல்கள் தொகுப்பும் வெளியீடும் | | 63,672 |
| சக்திக் கொள்கை ஆராய்ச்சி பற்றிய கருத்தரங்கு | | 168,000 |
| | - | 24,511,172 |
| **திறமுறைசார்ந்த செயற்பாடுகள்** | | |
| 1 சக்தித் தரவுகள், தகவல்கள் தொகுப்பும் வெளியீடும் | 1,944,284 | |
| 2 நாடளாவிய எரிபொருள் நிலைய மதிப்பாய்வு | 6,721,053 | |
| 3 வீட்டுத் துறை மின்சக்திக் கேள்வி அம்சங்கள் | 911,334 | |
| 4 சக்திக் கொள்கை ஆராய்ச்சி பற்றிய வேலையரங்குகள் | 1,140,670 | |
| | 10,717,341 | |
| | **79,369,233** | **104,212,364** |
| **மீண்டெழும் செலவுகள்** | | |
| **குறிப்பு 17 : சம்பளங்களும் கொடுப்பனவுகளும்** | | |
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 46,665,650 | 40,090,983 |
| வாழ்க்கைப் படிக் கொடுப்பனவு | 8,751,600 | 8,682,144 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | 5,839,872 | |
| ஊ.சே.நி. 12% | 6,654,047 | 5,329,702 |
| ஊ.ந.நி. 3 % | 1,663,161 | 1,346,171 |
| மேலதிகநேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவுகள் | 3,700,950 | 3,852,306 |
| செலுத்துநர் வரி | | |
| பணிக்கொடை | 1,305,150 | 976,802 |
| நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் | | |
| நுகரப்படாத லீவுக்கான சம்பளம் | | |
| மருத்துவக் காப்புறுதி | 1,490,837 | 1,500,008 |
| சொந்த வாகனப் பயன்பாடு | 690,000 | |
| | **76,761,267** | **61,778,116** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| **குறிப்பு 18 : பிரயாண மற்றும் வாழ்க்கைச்செலவுப் படி** | | |
| உள்நாட்டுப் பிரயாணம் | 559,522 | 763,931 |
| வெளிநாட்டுப் பிரயாணம் | 153,531 | 559,139 |
| வெளிநாட்டுப் பிரயாண வாழ்க்கைச்செலவுப் படி | 1,752,477 | |
| | 2,465,530 | 1,323,070 |
| **குறிப்பு 19 : வழங்கல்கள்** | | |
| அச்சீடு, காகிதாதிகள் , அலுவலகப் பொருட்கள் | 1,329,229 | 3,578,925 |
| எரிபொருள், உராய்வுநீக்கி எண்ணெய்கள் | 3,764,224 | 5,972,476 |
| ஏனையவை - செய்திப்பத்திரிகைள் , நானாவித சேவைகள் | 134,275 | 135,973 |
| | 5,227,728 | 9,687,374 |
| **குறிப்பு 20 : பராமரிப்பு சார்ந்த செலவுகள்** | | |
| வாகனங்களின் பராமரிப்பு, காப்புறுதி, அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 7,084,759 | 7,420,108 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 430,170 | 595,203 |
| கட்டிட நிர்மாணங்கள் பராமரிப்பு | 92,875 | |
| | 7,607,804 | 8,015,311 |
| **குறிப்பு 21 : ஒப்பந்த சேவைகள்** | | |
| அலுவலக வாடகைகள், வாடகைக் கட்டணங்கள் | 23,205,507 | 23,089,238 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 2,613,004 | 2,479,476 |
| போக்குவரத்து | 802,329 | 825,802 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 600,000 | 600,000 |
| | 27,220,840 | 26,994,516 |
| **குறிப்பு 22: தேய்மானம் சார்ந்த செலவுகள்** | | |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,379,666 | 1,978,455 |
| மோட்டார் வாகனங்கள் | 1,158,245 | 524,235 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 373,223 | 459,480 |
| கணனிகள் | 3,099,306 | 4,124,389 |
| மின்சாரப் பொருட்கள் | 52,682 | 36,531 |
| வாசிகசாலை நூல்கள் | 71,175 | 9,801 |
| சக்தி உபகரணங்கள் | 7,041,829 | 4,731,111 |
| காற்று சக்திக் கோபுரங்கள் மற்றும் உபகரணங்கள் | 9,648,214 | 9,712,206 |
| குளிர்சாதனப்பெட்டிகள் பரிசோதனை ஆய்வுகூடம் | 8,433,067 | 7,855,460 |
| அம்பாந்தோட்டை சக்திப் பேட்டை | 127,947,897 | 133,487,207 |
| கண்காட்சி உபகரணங்கள் | 500 | 500 |
| | 160,205,804 | 162,919,375 |
| **குறிப்பு 23 : ஏனைய மீண்டெழும் செலவுகள்** | | |
| அலுவலக மற்றும் ஏனைய நானாவிதச் செலவுகள் | 2,255,581 | 1,158,584 |
| பத்திரிகை விளம்பரங்கள் | 246,186 | |
| காப்புறுதி | 32,966 | |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 41,721 | 61,061 |
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 465,000 | 700,000 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 506,147 | 1,045,782 |
| தொழிலாளர் கட்டணங்கள் | | |
| நலனோம்புகை சார்ந்த செலவுகள் | | |
| உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1,433,270 | 911,812 |
| வங்கிக் கட்டணங்கள் | 27,388 | 84,095 |
| விதுல்கா பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | | |
| தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (தே.க.வ.) | 1,246,711 | 1,666,937 |
| தீராத பற்றுக்கள் | 25,700 | |
| | 6,254,970 | 5,628,271 |

குறிப்பு 24

**முன்னைய ஆண்டுகளின் மீளெடுத்துரைப்பு**

| | | 2014 ரூ. (பற்று)/வரவு | | |
|---|---|---|---|---|
| | 2015 ஆம் ஆண்டில் | | | |
| 1 | அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டையின் நிகழும் பணி | 4,332,591 | வரவு | சூரிய சக்திப் பேட்டையில் நிறைவு செய்யப்பட்டிருக்கின்ற WIP |
| | நிலையான சொத்துக்கள் - கட்டிடங்கள் | (3,517,591) | பற்று | சுதாதா என்டர்ப்ரைஸின் மூலம் |
| | தேறிய மிகைகள்/செயற்பாடுகள் | (815,000) | பற்று | |
| 2 | தேய்மானம் - காற்று சக்திக் கோபுரங்கள் | (105,395) | பற்று | |
| | திரண்ட தேய்மானம் - காற்று சக்திக் கோபுரங்கள் | 640,503 | பற்று | காற்று சக்திக் கோபுரங்களின் தேய்மானம் |
| | பிற்போடப்பட்ட மானியம் | (640,503) | பற்று | முன்னைய ஆண்டுகளில் |
| | பிற்போடப்பட்ட வருமானம் | 105,395 | வரவு | |
| 3 | செயற்பாடுகள் | (47,501) | பற்று | திரண்ட செலவுகளுக்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற |
| | திரண்ட செலவுகள் | 47,501 | வரவு | |
| 3 | WIP- உயிரணுத்திணிவுச் சக்தி மாநார திண்மக் கழிவுகள் சோதனை அறிக்கை | (709,000) | பற்று | செவ்வை செய்யப்பட்டிருக்கின்ற WIP முதலீடு |
| | செயற்பாடுகள் | 709,000 | வரவு | உயிரணுத்திணிவுச் சக்தி பற்றிலிருந்து செயற்பாடுகளுக்கு (RE/03) |
| 4 | பிற்போடப்பட்ட மானியம் | 750,375 | வரவு | காற்று சக்திக் கோபுரங்களின் பிடித்துவைக்கப்பட்டிருக்கின்ற |
| | செயற்பாடுகளுக்கான மூலதன மானியம் | (750,375) | பற்று | |
| | தேறிய மிகைகள் | | | |
| 5 | திரண்ட செலவுகள் | (659,860) | பற்று | செவ்வை செய்யப்பட்டிருக்கின்ற செலவுகளின் தவறு நிலை |
| | தேறிய மிகைகள்/செயற்பாடுகள் | 659,860 | வரவு | ரொடெக்ஸ் மற்றும் SS ப்ரின்டெர்ஸ் ஆகியவற்றுக்கு |
| 6 | தேறிய மிகைகள்/RCL வாடகை | 3,956,635 | வரவு | செலுத்த வேண்டிய RCL வாடகையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்ற |
| | திரண்ட செலவுகள் | (3,956,635) | பற்று | திரண்ட செலவுகள் |
| 7 | தேறிய மிகைகள்/ஏனைய வருமானம் | (374,675) | பற்று | கிடைத்திருக்கின்ற விதுல்கா கண்காட்சிக் கொட்டகை வருமானம் |
| | கிடைக்க வேண்டிய கொட்டகை வருமானம் | 374,675 | வரவு | |
| 8 | தேறிய மிகைகள்/தேய்மானம் | 3,962,770 | வரவு | சீராக்கப்பட்டிருக்கின்ற மிகைத் தேய்மானம் |
| | திரண்ட தேய்மானம் | (3,962,770) | பற்று | 2014 ஆம் ஆண்டில் மின்சார இலத்திரனியல் பொருட்களின் |
| | பிற்போடப்பட்ட மானியம் | 3,962,770 | வரவு | |
| | பிற்போடப்பட்ட வருமானம் | (3,962,770) | பற்று | |
| 9 | தேறிய மிகைகள்/பணிக்கொடை செலவுகள் | (2,453,100) | பற்று | 2014 இல் COLA இற்காக சீராக்கப்பட்டிருக்கின்ற பணிக்கொடை |
| | பணிக்கொடைப் பொறுப்புக்கள் | 2,453,100 | வரவு | |
| 10 | கிடைக்க வேண்டிய தொகை - மின்சக்தி உற்பத்தி | (404,958) | பற்று | இ.மி.ச. சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை |
| | ஏனைய வருமானம் - மின்சக்தி உற்பத்தி | 404,958 | வரவு | 2014 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படாத மின்சக்தி உற்பத்தி |
| 11 | WIP- ப்ரொடோடைப் மின்சார வாகனங்கள் | (7,956,800) | பற்று | மூலதனப்படுத்தப்பட்டிருக்கின்ற செலவுகள் |
| | தேறிய மிகைகள்/செயற்பாடு | 7,956,800 | வரவு | ப்ரொடோடைப் மின்சார வாகனங்கள் |
| | தேறிய மிகைகள் | - | | |
| | | (0) | | |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. பீஓச/சீ/எஸ்எல்எஸ்சஏ/எவ்ஏ/2015 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 2016 திசெம்பர் 08

தலைவர்,
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்குக் காலக் கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்ததாக உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய சகல பெறுமதிகள் தொடர்பாகவும் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது குறிப்புகளில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2012 ஆம் ஆண்டிற்கான கட்டிட வாடகைக் கொடுப்பனவாகிய ரூபா 8,033,271 சர்ச்சைக்குரியதானதால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக கணக்கிலிடப்படவோ அல்லது நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தப்பட்டோ காட்டப்படவில்லை. எவ்வாறாயினும், அதிகாரசபையானது 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியன்று அத்தொகையைக் கொடுப்பனவு செய்திருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்தி வருமானம் மற்றும் இந்துரன சிறிய அளவிலான நீர் மின்சார உளை வருமானம் என்பன முறையே ரூபா 42,049,876 மற்றும் ரூபா 3,836,217 என கணக்கிலிடப்பட்ட போதும், இன்வொயிசின் பிரகாரம் வருமானம் அவை முறையே ரூபா 39,129,831 மற்றும் ரூபா 3,431,567 ஆகியமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,324,695 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அம்பாந்தோட்டை மற்றும் இந்துரன வலு உற்பத்தி மூலம் பெற வேண்டிய வருமானமாகக் கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 12,981,175 ஆகும். எவ்வாறாயினும், இன்வொய்சின் பிரகாரம் பெற வேண்டிய வருமானம் ரூபா 16,560,440 ஆகும். இதன் விளைவாகப் பெற வேண்டிய வருமானம் ரூபா 3,579,265 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 218,670 செலவில் கெப் வண்டி ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கெனோபி மூலதனமாக்கப்பட்டபோதும், மீளாய்வாண்டிற்குரிய தேய்மானமாகிய ரூபா 32,800 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அம்பாந்தோட்டை சோலர் பார்க் செயற்திட்டத்திற்காக மஹாவலி அதிகார சபையிடமிருந்து 2011 ஜுலை 28 ஆந் திகதியன்று சுவீகரிக்கப்பட்ட 50 ஏக்கர் காணியை மீளாய்வாண்டிலேனும் மதிப்பீடு செய்து அதனை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கவில்லை.

(உ) உடப்பில் உள்ள ரூபா 2.244,800 கிரயமுடைய காற்றாடிக் கோபுரம் 2010 ஒக்டோபரில் விழுந்ததால் இழப்பு ஏற்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகளுக்கு அதிகமாக செயலற்றுமிருந்தது. இச் சொத்துக்களது தேறிய பெறுமதியாகிய ரூபா 601,875 ஐப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு 2016 செப்டம்பர் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 1 ஆண்டிற்கு கூடிய மற்றும் 4 ஆண்டுகளுக்குக் குறைவான மீதிகளாகிய ரூபா 3,486,182 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,275 மீதி என்பவற்றை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு சேர்ந்து நின்ற செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருந்த தொகை ரூபா 11,579,596 ஆகும். இதில் ரூபா 7,622,186 தொகையானது 2011 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அத்தொகையைத் திர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்தில் செலவு வைப்பதற்கோ மீளாய்வாண்டு முடிவுவரை அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| 7(1),8(1), 42(1) ஆம் பிரிவுகள் | புதுப்பித்தலுக்காக வலுக் கையிருப்பு (RENEWABLE ENERGY INVENTORY) வலுவைக் குறிக்கும் வரைபடம், வலு அபிவிருத்தித் திட்டம் மற்றும் இலங்கை வலு அபிவிருத்தித் துறையின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையைத் தயாரித்து அமைச்சருக்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 14 (1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கடன் 2015 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவிலலை. |
| (இ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 108 | இழப்பு மற்றும் நட்டங்களுக்கான பதிவேடு பேணப்படவில்லை. |

5

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 | அதிகாரசபையிடம் 18 வாகனங்கள் இருந்தன. அதில் 8 வாகனங்களது எரிபொருள் நுகர்வு அவ்வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகளிலிருந்தே சம்பவப் பதிவேடுகளில் பதியப்படாதிருந்தன. அத்துடன், எஞ்சிய 8 வாகனங்களது எரிபொருள் நுகர்வும் சில ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756(i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் நிலையான வைப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கணனிகள், துணைப்பாகங்கள், மென் அணி சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2015 ஜுலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது 9 சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுதரத்தைச் சேராத உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாக ரூபா 100,000ஐ விஞ்சும் விதத்தில் வழங்கப்பட்டிருந்தது. |

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பணிப்பாளர் நாயகம் உட்பட அதிகாரசபையின் 6 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்பிற்குக் கூடுதலாக 4.088.5 லீட்டர் எரிபொருள் மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்டிருந்தது. அதன் பெறுமதி ரூபா 478,373 ஆகும். |

(ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய PED/45 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய பொறுப்புகள் தொடர்பான கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2007 செப்டெம்பர் 28 தொடக்கம் 18 மாதங்களுக்குள் 3 பிரட்டோடைப் மின்சார வாகனங்களைப் புதுப்பிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின்போது வெளி நபர் ஒருவருக்கு ரூபா 7,888,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 செப்டம்பர் 30 ஆந் திகதி வரையும் ஒரு வாகனத்தையேனும் புதுப்பிப்பதற்கு அந்நபரால் இயலாது போனதுடன், 7 ஆண்டுகள் கடந்தும் 3 வாகனங்களையும் புதுப்பித்துத் திருப்பி பெறுவதற்கோ அல்லது கொடுப்பனவு செய்த பணத்தை திருப்பிப் பெறுவதற்கோ சட்ட ரீதியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

அதிகாரசபைக்குச் சொந்தமான 16 வாகனங்களுள் 2 கெப் வண்டிகள் ஏறக்குறைய 1 ½ ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது வாகனப் பிரிவில் காணப்பட்டதுடன். ஒரு வண்டிக்கு டயர் பொருத்துவதற்கென 2015 சனவரி 26 ஆந் திகதியன்று ரூபா 113,103 செலவிடப்பட்டிருந்தது. மற்றைய வாகனத்திற்குச் சாரதி காணப்படாமை, அதிக எரிபொருள் நுகர்வு மற்றும் வீதிக்குப் பொருத்தமற்றவை போன்ற காரணத்தால் அவை பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

### 4.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

கபரகல எனும் இடத்தில் காற்றாடிக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின்போது வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம், உபகரணக் கிரயம் மற்றும் வேலைத்தளப் பரிசீலனைக் கட்டணம் என முறையே ரூபா 416,875, ரூபா 576,500, ரூபா 833,750 என மொத்தமாக ரூபா 1,827,125 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலையானது 2016 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், தாமதம் காரணமாக கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் தரவுகளைப் பெறும் பணியானது எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்யப்படாது போயிற்று.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அதிகாரசபைக்கென அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 136 ஆகும். 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 பதவியணியினர் மாத்திரமே இருந்தனர். அதற்கமைய, பதவியணியில் 30 வெற்றிடங்கள் நிலவியதுடன், இவ் வெற்றிடங்களில் பிரதான பதவிகளான 2 பணிப்பாளர் பதவிகள், 4 பிரிவு தலைமைப் பதவிகள் மற்றும் 11 முகாமைத்துவப் பதவிகள் காணப்பட்டதால் அதிகார சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அது தடையாக விளங்கியமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான 28 கோவைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் 26 கோவைகளில் பயிற்சியின் பின்னர் உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 134 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) ஆம் இலக்கமுடைய 2009 ஜுன் 09 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு நடைபெறுவது அவசியமெனினும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கென பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் அடங்கலாக அதன் பதவிகளுக்கான உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாடுகள், என்பவற்றிற்கு மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 134,243,000 ஆகும். அதில் ரூபா 79,369,233 செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய 41 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 54,873,767 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, எற்பாடு செய்யப்பட்ட நிதியை நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீட்டின் மூலம் மூலதனச் செலவினத்திற்கென ரூபா 10,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 5,254,951 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மூலதன நிதியேற்பாட்டின் 47 சதவீதமான ரூபா 4,745,049 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

(இ) காணி மற்றும் கட்டிடங்களைச் சுவீகரிப்பதற்கு பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின்போது மூலதனச் சேமிப்புகளில் ரூபா 49,185,376 அதற்கெனப் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் இணக்கஞ் செய்தபோது 32 செலவின விடயங்களில் 10 முதல் 104 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதன் மூலம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சாத்தியமானதாகத் தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களை மதிப்பிடுதல், பதிவு செய்தல், பாதுகாத்தல் அதிகார சபையின் வளங்களை நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கென வினைத்திறனுடன் பயன்படுத்தாமை. |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய தொகை என்பவற்றைத் தாமதமின்றிச் சேகரிக்காமையும் கணக்கிலிடாமையும் |
| (ஈ) மனிதவள முகாமைத்துவம் | அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான கடமைகள் மற்றும் அளவு என்பவற்றிக்கமைய மனிதவள முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமை. |
| (உ) செயற்திட்ட அமுலாக்கல் | செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் செயற்திட்டப் பணிகளை நோக்கத்திற்கு இணையாக அமுலாக்காமை |
| (ஊ) கணனி மயப்படுத்திய பேரேட்டு நடைமுறை | பல்வேறு செலவின விடயங்களின் கீழ் ஏற்படும் செலவினங்களைப் பகுப்பாய்வு செய்யக்கூடியவாறு கணனிப் பேரேடுகளை அறிமுகம் செய்யாமை. |
| (எ) கணக்கீடு | நாட்குறிப்புகளைத் தயாரித்தல் |

ஒப்பம் :- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் அறிக்கை பதில்கள்

## 2. நதி அறிக்கைகள்

### 2.2 நிதி அறிக்கை தொடர்பான கருத்து தெரிவித்தல்

#### 2.2.1 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரைகள்

இதற்குரிய கணனி மென் பாகங்கள் மாற்றப்பட்டதன் பின்னர், எதிர்வரும் ஆண்டுகளில் இந்தத் தரவுகளை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வாளர் அதிபதியினாலும்2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் எமது அதிகார சபையின் கணக்குகளில் RCLசார்பாக எதுவும் குறிப்பிடப்படக் கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால், 2015 ஆம் ஆண்டு கணக்குகளில், இதனை முரண்பாடுகளுக்கு வழிவகுக்கின்ற ஒரு விடயமாக குறிப்பிடுவதற்கு காரணம் ஏதுமிருக்கவில்லை. மேலும், இலங்கை மின்சார சபையிலிருந்து இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும், எமது அதிகார சபை, அமைச்சினூடாக நடவடிக்கையை எடுத்துள்ளது. இது பற்றி அமைச்சின் AMCகூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) செலவுப் பட்டியல்கள் வழங்கப்பட்ட பின்னரும் மற்றும் அந்த செலவுப் பட்டியல்கள் வழங்கப்பட்ட நாளுக்கும் என வருமானம் சரியாக கணக்கு காட்டப்பட்டிருக்கின்றது. அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்திப் பேட்டை தொடர்பான செலவுப் பட்டியல்கள் வழங்கப்பட்டிருப்பது இலங்கை மின்சார சபையிடமிருந்து இது தொடர்பான தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னராகும் என்பதால், மாணிவாசிப்புக்குரிய மாதத்திற்கு பின்னர் அத்தகைய செலவுப் பட்டியல்கள் வழங்கப்படுகின்றன.ஆகையால், இது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த விளக்கங்களின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்கான அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்திப் பேட்டையின் வருமானம் 42,049,876ரூபா என சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது சரி என தற்போதைய கணக்காய்வு அத்தியட்சகருக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறித்த முறையியலுக்கு இணங்க 2015 ஆம் ஆண்டிற்கு இந்துரான நீர் வலு மின்னுற்பத்தி நிலையத்தின் வருமானம் =/3,559,824 ரூபா என சீராக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த விளக்கத்தின் பிரகாரம், அம்பாந்தோட்டை காற்று சக்தி உற்பத்திப் பேட்டை மற்றும் இந்துரான நீர்

வலு மின்னுற்பத்தி நிலையம் என்பவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை =/13,109,742 ரூபா என சீராக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த கெனொபியின் பெறுமானம் தொடர்பில் 2016ஆம் ஆண்டிலும் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) இதற்கான காணி உறுதி தற்பொழுது கிடைத்துள்ளது. விலைமதிப்பீட்டுத் திணைக்களம் இந்த காணியை விலைமதிப்பிட்டு அறிக்கையிடுமாறு 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தனது தென் மாகாண உப அலுவலகத்திற்கு அறிவித்துள்ளது. அந்த அலுவலகத்தின் அலுவலர்கள் இந்த காணியை விலைமதிப்பிடுவதற்கு வந்தனர். இதன் விலைமதிப்பீட்டு அறிக்கை மிக நெருங்கிய எதிர்காலத்தில் கிடைக்கச் செய்யப்படும் என அந்த அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ) உடப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த காற்று சக்தி அளவீட்டுக் கோபுரம், உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர், 2016ஆம் ஆண்டிற்கான கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது (write off).

**.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) இந்த விடயங்களில் பல விடயங்கள் இலங்கை மின்சார சபைக்கும், எரிபொருள், தொலைபேசி முதலியவற்றுக்கும் என வைப்புச் செய்யப்பட்ட தொகைகளாகும்.

இந்த வைப்புத் தொகைகளை மீளப் பெற்றுக் கொள்ள முடிவது அந்தந்த சேவை நிறுவனங்கள் அவற்றின் சேவைகளை வழங்கி முடிந்த பின்னராகும்.

இவற்றில் ஒரு சில, ஒவ்வொரு கருத் திட்டத்திற்கும் என வெளி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகைகளாகும்.

(உதாரணம்: கடற்றொழில் அமைச்சு, பிரதேச சபை, தென் மாகாண சபை (இந்த நிதித் தொகை, கருத் திட்டங்களை செயற்படுத்தும் பிரிவின் மூலம் இன்னும் சரியான முறையில் தீர்ப்பனவு செய்யப்படவில்லை).

(ஆ) இவற்றில் 2,945,699.50ரூபா தொகைக்கான காலவதி காலம் முடிவடைந்துள்ளதால், பணிப்பாளர்கள் சபையின் அனுமதி கிடைத்த பின்னர், கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.4 விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இனக்கமின்மை

**2007 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க நிலைபெறுதகு**

**அதிகாரச் சட்டம்**

குறித்த சட்டத்தினது 7 (1) ஆம் பந்தியின் பிரகாரம், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பற்றிய கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு, மீள சக்தியூட்டக் கூடிய சக்தி வளங்கள் தொடர்பான வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினாலேயே நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதில் சூரிய சக்தி தொடர்பான 'Sri Lanka Solar Atlas'பிரகடனப்படுத்தப்பட்டது. சூரிய சக்தி வள சாத்தியமுடைய இடங்கள் பற்றிய பிரதேச மட்டத்திலான விபரங்களை இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (www.energy.gov.lk/sub_pgs/energy_renewable_solar_atlas.html

அதே போன்று, உயிரணுத் திணிவுச் சக்தி பாவனை பற்றிய விபர அறிக்கைகளும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய அறிக்கைகளை www.energy.gov.lk/biomass-energy-consumption-sri lanka- industries மூலம் கீழிறக்கம் (Download)செய்து கொள்ளலாம். 11 மாவட்டங்களின் உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தி தொடர்பான ஒரு அறிக்கையை தயாரிக்கும் பணி GEF/UNDP/FAO நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற நிலையான உயிரணுத் திணிவுச் சக்திக் கருத் திட்டத்தின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

காற்று சக்தி வளங்களை வரைபடமாக்குவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால், அதிக சாத்தியமுடைய பிரதேசங்களில் காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் நிர்மாணியக்கப்பட்டு, அத்தகைய கோபுரங்கள் தற்பொழுது இயங்கும் நிலையிலுள்ளன. அந்த காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்களிலிருந்து இன்றும் தரவுகள் கிடைத்த வண்ணமுள்ளன. இது வரை கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில், அதிக சாத்தியமுடைய மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் காற்று சக்தித் தரவு வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய பிரதேசங்களில், இந்தத் தரவுகளின் அடிப்படையில், கருத் திட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது, ஓரளவுக்கு நீண்ட கால தரவுகளை பெற்றுக் கொள்ள முடியும். அத்தகைய வரைபடங்களையும் விரைவில் தயாரித்து நிறைவு செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீர் வலு மின்னுற்பத்தியின் ஒட்டுமொத்த சாத்தியம் பற்றி பிரதேச மட்டத்தில் ஆய்வு செய்யும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய சாத்தியமுடைய பிரதேசங்கள் தற்பொழுது வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கெனவே சிறிய நீர் வலு மின்னுற்பத்தி நிலையங்களை ஊக்குவிக்கும் பொருட்டு எமது அதிகார சபைக்கு 802விண்ணப்பங்கள்) அவற்றின் ஒட்டுமொத்த சக்திக் கொள்திறன் அளவு ஏறக்குறைய 1179.37மெ.வொ.(கிடைத்துள்ளன. இவற்றில் 178கருத் திட்டங்கள் ஏற்கெனவே வலையமைப்பில்

சேர்க்கப்பட்டுள்ளன. 83கருத் திட்டங்களுக்கு சக்தி அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட்டு, நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும்88 கருத் திட்டங்கள் தற்காலிக அனுமதிகளைப் பெற்றுக் கொண்டு, தேவையான அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையிலுள்ளன. எஞ்சிய கருத் திட்டங்களை வலையமைப்பில் சேர்க்கும் சாத்தியம் பற்றி வினவும் பொருட்டு, இலங்கை மின்சார சபைக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இன்னும் அது தொடர்பில் சரியான ஒரு பதில் கிடைக்கவில்லை.

காற்று சக்தி மற்றும் சூரிய சக்தி உற்பத்திக் கருத் திட்டங்கள் முறையே (128),(15)மற்றும் (7) என தற்பொழுது வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை தவிர, இறுதியாக 89காற்று சக்தி உற்பத்திக் கருத் திட்டங்களுக்கும் 744)மெ.வொ.(சூரிய சக்தியை ஊக்குவிக்கும் பொருட்டு சுமார் 665விண்ணப்பங்கள் 2036)மெ.வொ. (எமது அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. இவற்றை வலையமைப்பில் சேர்க்கும் முறையியலிலுள்ள தொழில் நுட்ப பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படாத காரணத்தினால், அத்தகைய விண்ணப்பங்கள் இன்றும் எமது அதிகார சபையில் படிமுறைப்படுத்தப்படாத நிலையிலுள்ளன.

எமது அதிகார சபையிலுள்ள தரவுகளுக்கு இணங்க, இலங்கையில் காற்று சக்திற்கு சுமார் 20,000மெ.வொ. கொள்திறனும், சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவிருந்தால், இலங்கையில் நிலவும் மின்சார தேவைக்கு தேவைப்படுவது, இலங்கையிலுள்ள மொத்த இடங்களில்1 % வீதம் என்ற சொற்பளவிலாகும். கருத் திட்டத்தை முன்வைக்கும் தரப்புகளினால் எமது அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கருத் திட்டமும் மேலும் ஊக்குவிக்கப்பட்டிருப்பது எமது அதிகார சபையிடமுள்ள தரவுகளின் அதாவது மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் இருப்பு )Renewable Energy Inventory)மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வரைபடங்கள் என்பவற்றின் உதவியினாலாகும்.
குறித்த சட்டத்தினது 8(1)ஆம் பிரிவின் பிரகாரம், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் 2025 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் மூலம் 2025-2015 வரையான இலங்கை மின்சக்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

குறித்த சட்டத்தினது (1) 42ஆம் பிரிவின் பிரகாரம்குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை, 2015ஆம் ஆண்டினுள் 2014ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு, மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு அடங்கலாக, உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்

14 (1) ஆம் பிரிவு

2015ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையை, நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) (i) கடந்த ஆண்டுகளில் இது வரை நட்டங்கள் பதிவாகியில்லை.

(ii) அதிகார சபைக்கு சொந்தமான 16 வாகனங்களில் 15வாகனங்களுக்கான எரிபொருள் விபரங்கள் ஏற்கெனவே இணக்கல் செய்யப்பட்டு, பேரேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 3189-54 ஆம் இலக்க கெப் வண்டி ஓடும் நிலையிலில்லை.

)iii) பொருட்கள் கணக்கெடுப்பு 2016 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே மேற்கொள்ளப்பட்டு, பொருட்கள் கணக்கெடுப்பு குழுவினால் அதன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(இ) (i) நிலையான சொத்துக்களின் பட்டியல் 2009 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை பேணப்பட்டுள்ளது.

(ii) கணனிகள் பற்றிய நிலையான சொத்துக்கள் பட்டியலை பேணும் விடயம், 2016ஆம் ஆண்டின் உதவிகள் சேவைப் பிரிவின் மூலம்/அதிகார சபையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் அதிகார சபையின் சலக கணனிகள் தொடர்பான விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(iii) இந்த முற்பணங்கள், வெளிப் பிரதேசங்களில் விஷேட கண்காட்சிகள் முதலிய நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் மற்றும் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் என அனுமதியுடன் செலுத்தப்பட்டுள்ளன. எனினும், தற்போதைய புதிய சுற்றறிக்கையின் பிரகாரம், MM 1முதல் அதற்கு மேலுள்ள சேவை வகுதி ஊழியர்களுக்கு =/100,000ரூபா வரை செலுத்த முடியும் என்பதால், இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தற்பொழுது செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) அரச நிர்வாக சுற்றறிக்கைகள்

PED 1/2015 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கைக்கு இணங்க, எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. இந்த சுற்றறிக்கையின் 3.2ஆம் பந்தியின் பிரகாரம், பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன், தேவையான மேலதிக எரிபொடுட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஊ) எமது அதிகார சபை SLPSA கணக்கீட்டு நிறுவகத்தின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளை தயாரிக்கின்றது. அந்த நியமங்களின் பிரகாரம் பொறுப்புக்கள், கணக்கு நிலுவைகளிலும் கணக்குகளுக்கான குறிப்புகளிலும் காட்டப்பட்டுள்ளன.

**2.5போதியளவு அதிகாரமின்றி உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் செயலாளரது இத்தகைய ஒரு கட்டளை இந்த அதிகார சபையின் நிதிப் பிரிவுக்கு கிடைக்கவில்லை. எனினும், இது தொடர்பில் திறைசேரியின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு எமது அதிகார சபையின் தற்போதைய தலைவர் நடவடிக்கையை எடுத்து வருகின்றார்.

### 3 நிதிசார் மீளாய்வுகள்

### 3.1 நதிப் பெறுபேறுகள்

இதன் புதிய நிலை என்னவெனில் 2016ஆம் ஆண்டு கணக்கு அறிக்கைகளின் பிரகாரம் தேறிய மிகை 15.263மில்லியன் ரூபா என மிகைத்து காட்டப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் யாதெனில் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் 2015ஆம் ஆண்டில் 31.813மில்லியன் ரூபா முதல்2016 ஆம் ஆண்டில் 57.407மில்லியன் ரூபா வரை அதிகரித்திருந்தமையாகும்.

### 4செயல்பாட்டு மதிப்பாய்வுகள்

### 4.1 இயக்கச் செயற்பாட்டுகள்

இந்தக் கருத் திட்டம் பற்றிய விரிவான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கு விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 4.2 அவதானிக்கப்பட்ட குறை பயன்னாடுடைய சொத்துக்கள்

PD - 4477 ஆம் இலக்க கெப் வண்டி பாவனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

3189-54ஆம் இலக்க வாகனம் மிகவும் பழைய )சுமார்22 வருடங்கள்(வாகனம் என்பாதல், அதனை பழுதுபார்த்து பாவனையில் ஈடுபடுத்துவது நிறுவன ரீதியில் அவ்வளவு பயன் தராது என லங்கா ஒட்டோ மோபைல் கம்பனியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த வாகனத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 4.3 தாமதித்த கருத்திட்டங்கள்

கபரகல காற்று சக்தி அளவீட்டுக் கோபுரத்திற்கு செலுத்தப்பட்ட 576,500ரூபா பெறுமானத்திற்கான பொருட்கள் இந்த அதிகார சபையின் வசமுள்ளன. இந்த காற்று சக்தி அளவீட்டுக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு E- Netகம்பனியினால் இயலாது போன காரணத்தினால், ஏற்கெனவே உரிய ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு, அந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய %25வீத எஞ்சிய தொகையும் மற்றும்%5 வீத பிடித்து வைத்தல் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளன. குறித்த அந்தக் கோபுரத்தை வேறொரு இடத்தில் பொருத்த தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

(அ) மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் செயற்பட்டு வருகின்றதுடன் ஆட்சேர்ப்பு வரைவு அறிக்கை தயாரித்து பொருத்தமான அமைச்சுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன், நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) வெளிநாட்டுப் பயிற்சிகள் நிறைவு பெற்றவுடன் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறியப்படுத்தி அத்தகைய அறிக்கைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5 கணக்கீட்டுத் தன்மை மற்றும் நல்லாட்சி

### 5.1 உள்ளக கணக்காய்வு

தற்பொழுது உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர், கணக்காய்வு நிறைவேற்று அலுவலர் ஒருவர் மற்றும் கனிஷ்ட கணக்காய்வு நிறைவேற்று அலுவலர் ஒருவர் ஆகியோர் அடங்கிய ஒரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர், அனுமதிக்கப்பட்ட பின்னர் காலம் தாழ்த்துவதற்கு சம்பளங்கள் மற்றும் பதவியணி பற்றிய ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. ஆதலால், ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் பதவிற்கு மாத்திரம் அனுமதியை வழங்க அந்த ஆணைக்குழு உடன்பட்டது என்பதையும் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

இந்த வரவுசெலவுத்திட்டத்திற்கும் உண்மையான அறிக்கைக்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கான பிரதான காரணம் யாதெனில், அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு இலங்கை மின்சார சபையில் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டமையாகும். ஆகையால், அந்த வருமானத்திற்குரிய ஒரு சில செலவுகளை /கருத் திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. எனினும், 2016 ஆம் ஆண்டு, அமைச்சினது தலையீட்டின் காரணமாக, இந்த நிலுவைத் தொகை இலங்கை மின்சார

சபையிலிருந்து கிடைத்திருந்தது. ஆயினும், மீண்டும் இந்தக் கொடுப்பனவுகள் இலங்கை மின்சார சபையினால் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் ,Rural electrification என்ற பெயரில் அதிகளவு கருத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், அவ்வாறு அத்தகைய கருத் திட்டங்கள் அதிகளவில் அதிகரித்ததால், பணிகள் ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தத் தரப்பினால் அத்தகைய பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை. இதுவும் இதற்கான ஒரு காரணமாகும்.

(ஆ) 10மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டிருந்தாலும், அதில் செலவு செய்யப்பட்டிருப்பது =/6,161,611ரூபா மாத்திரமாகும். எஞ்சிய நிதி திறைசேரியிலிருந்து கிடைக்கவுமில்லை.

(இ) இந்த காணி சுவீகரிக்கப்பட்டிருப்பது எமது அதிகார சபையின் அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காகும். இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது 2015 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் அனுமதிக்கப்பட்டதன் பின்னராகும். எனினும், இது மிகவும் அவசியம் என்பதால், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் எமது அதிகார சபையின் வருமானத்திலிருந்து செலவிடப்பட்டது.

(ஈ) இந்த செலவுகளில் ஒரு சில செலவுகள் வெளிவாரி நிறுவனங்களினால் எமது அதிகார சபைக்கு இறுதிக் கட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த கருத் திட்டங்கள் முதலியவற்றை மேற்கொள்வதற்கு செய்யப்பட்ட செலவுகளாகும். இவற்றில் சிலவற்றை பார்வையிடுவதற்காகவும் மற்றும் திறந்து வைப்பதற்காகவும் விஷேட அதிதிகள் வந்திருந்ததால் , பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் இவை செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணனியினூடாக சம்பளங்களை செலுத்தும் ஒரு முறையியல் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கணனிமயப்படுத்தப்பட்ட ஒரு முறையியலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, பதிவு செய்யப்பட்ட விநியோகத் தரப்புகளிடமிருந்து கேள்வி மனுக்கள் அழைக்கப்பட்டாலும், இதற்கு பதிலளித்திருப்பது இரண்டு விநியோகத் தரப்புகள் மாத்திரமே. இரண்டாவது தடவையாகவும் கேள்வி மனுக்கள் அழைக்கப்பட்டு, ஒரு TECகுழுவின் மூலம் ஒரு விநியோகத் தரப்பு சிபாரிசு செய்யப்பட்டாலும், அந்தத் தரப்பை கொள்வனவு குழுவின் தலைவர் நிராகரித்துள்ளதாக, கொள்வனவுப் பிரிவினால் வாய்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது.